# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 34 | கதிர் 148 | சித்திரை 12ஆம் நாள் | வியாழக்கிழமை | 25 ஏப்ரல் 2019 | வள்ளுவர் ஆண்டு 2050

பக்கங்கள் - 24

விலை - 30 ரூபா


**தாழமுக்கம் அவதானம்!**

கொழும்பு, ஏப். 25
வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த எவு காற்றழுத்த தாழ்முக்கத்தால் அடுத்த சில தினங்க 06

**சாவு 359**

# தமிழ் மக்களுக்கான தீர்வு தாக்குதல்களால் பாதிப்பு!

## சேனாதிராசா எம்.பி. கவலை

யாழ்ப்பாணம், ஏப். 25
இலங்கையில் தீவிரவாத அமைப்புக்களின் குண்டுத் தாக்குதலால், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக்குப் பாதிப்பு ஏற்படுமோ என்ற அச்சம் நிலவுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் 06



## வடக்கு மாகாண சபைக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
கைதடியிலுள்ள வடக்கு மாகாண சபையின் அலுவலகத் 21

## ஐ.எஸ்.ஐ.எஸ். தற்கொலைக் குண்டுதாரிகளுடன்

# ரிஷாத், முஜிபுர், அசாத், ஹிஸ்புல்லா அனைவருக்கும் நேரடி தொடர்புண்டு

## பதவிகளைப் பறித்து கைதுசெய்யுங்கள் என்று மைத்திரி, ரணிலிடம் மகிந்த அணி வலியுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 25
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் வழிநடத்தலில் தௌஹீத் ஜமா அத் அமைப்பின் தலைவர் மௌலவி சஹ்ரான் ஹாசீம் தலைமையிலேயே கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கையில் தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களின் தலைவர் சஹ்ரான் ஹாசீம் மற்றும் அவருடன் சாவடைந்த மேலும் இரண்டு தற்கொலைக் குண்டுதாரிகள் ஆகியோருடனும், சம்பவங்களின் பின்னர் கைதுசெய்யப்பட்டுள்ள தற்கொலைக் குண்டுதாரிகளின் உறவுகளுடனும் அமைச்சர் ரிஷாத் பதியுதீன், 06

முல்லைத்தீவில்

## முக்கிய இடங்களில் படையினர் பாதுகாப்பு

முல்லைத்தீவு, ஏப். 25
முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச திணைக்களங்கள் மற்றும் மக்கள் அதிகளவில் கூடும் வழிபாட்டுத் தலங்கள் என்பனவற்றுக்கு ஆயுதம் ஏந்திய 06

## மன்னாரில் எவருமில்லாத வீடுகளை பொலிஸார் பொறுப்பேற்கவேண்டும்

### பாதுகாப்புக்கருதி அவசர நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 25
மன்னார் மாவட்டத்தில் குடியிருப்பாளர்களின்றி பூட்டிய நிலையிலுள்ள அனைத்து வீடுகளையும் பொலிஸார் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும். அல்லது அவற்றுக்குச் சீல் வைக்க வேண்டும். இராணுவத்தினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட வுள்ளனர். 06



## தொலைக் காட்சிகளுக்கு தீ வைத்தார் மர்மநபர்

யாழ்ப்பாணம், ஏப். 25
பருத்தித்துறையில் தனியார் 21

வடக்கு மாகாணத்தில்

## பாடசாலை ஆரம்பித்து முடியும் வரையில் வளாகக் கதவுகள் மூடியிருக்க வேண்டும்

### கல்விப் பணிப்பாளர்களுக்கு கண்டிப்பான உத்தரவு

யாழ்ப்பாணம், ஏப். 25
பாடசாலைகள் ஆரம்பிக்கும் நாள் தொடக்கம் மறு அறிவித்தல் வரையில் பாடசாலை ஆரம்பமானதும் பாதுகாப்புக் 06

## பருத்தித்துறை இஸ்லாமியர்களின் விவரங்களை எஸ்.ரி.எவ். சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25
வடமராட்சி பருத்தித்துறையில் வாழும் இஸ்லாமியர்களின் விவரங்களை பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் பெற்றுச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை கார 21


தங்கப்பவுண் எனில், குறைந்த வட்டியில்
அதிக தொகை எம்மிடமிருந்து...

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

தற்போது தங்க பவுணிற்கு கரட் 24

அதிக அடகுத் தொகை
ரூ.48,000/-



அதேபோன்று
16%
குறைந்த வட்டிக்கு

சம்பத்
ரண்திரிய
அடகுச் சேவை

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

0112 30 30 50 | www.sampath.lk

# நீங்கள் வலுவாக இருக்கவேண்டும்

## மனைவியிடம் இறுதியாகக் கூறிய தற்கொலைதாரி விசாரணையில் தகவல்

கொழும்பு, ஏப். 25

உயிர்த்த ஞாயிறு தினத்தில் நாட்டின் பல பாகங்களில் பயங்கரவாத தாக்குதலில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தனர். நாட்டையே உலுக்கிய இந்தப் பயங்கவாத தாக்குதல் தொடர்பான புலன் விசாரணைகள் தீவிரமாக நடந்து வரும் நிலையில், தாக்குதலின் பின்னணி, தாக்குதல்தாரிகள் பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கான வெடிகுண்டுகள் வெல்லம்பிட்டிய பகுதி தொழிற்சாலையொன்றில் தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர். செப்பு தொழிற்சாலையென்ற பெயரில் இயங்கிய அந்த தொழிற்சாலையில், இரகசியமாக தற்கொலை குண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இன்சாப் அஹமட் என்பவருக்குச் சொந்தமானதே இந்த செப்புத் தொழிற்சாலை. அவரும் தற்கொலை குண்டுதாரியாக உயிரிழந்துள்ளார்.

இன்சாப் அஹமட் கண்டியில் பிறந்தார். தனது சகோதரர் அஷ்கான் அலாம்டீனுடன் கொழும்பில் பிரபல பாடசாலையில் கல்வி பயின்றார். இந்த தாக்குதலின் பின்னர், அஷ்கான் அலாம்டீன் தெரிவித்ததாவது:

மிகுந்த கோபமாக இருக்கிறது. அவர் எங்கள் குடும்பத்தை மட்டுமல்ல, நூற்றுக் கணக்கானவர்களையும் அழித்து விட்டார். அவர் இப்படி செய்வார் என்பதை நாம் அறிந்திருக்கவில்லை. தெரிந்திருந்தால் பொலிஸாரை எச்சரித்திருந்திருப்போம். அவர் இன்னொரு தம்பியையும் இதில் இணைத்து விட்டார் எனக் கூறியுள்ளார்.

இன்சாப் அஹமட் தற்கொலைதாரியாக சினமன் கார்டன் ஹோட்டலில் வெடித்து சிதறினார். அவரது தம்பி இல்ஹாம், சங்கரில்லாவில் தற்கொலை தாக்குதல் நடத்தியுள்ளார். மிகப்பெரிய செப்பு தொழிற்சாலையான அங்கு உள்ளூர் வெளிநாட்டு தொழிலாளர்கள் பலர் பணிபுரிகிறார்கள்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாட்டை சேர்ந்தவர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களில் பாகிஸ்தானியர் 9, இந்தியர் 3 பேர் கைதாகியுள்ளனர். தொழிற்சாலையின் முகாமையாளர், மேற்பார்வையாளர், தொழில்நுட்பவியலாளர் இவர்களில் உள்ளடக்கம்.

இன்சாப் அஹமட் தொழிற்சாலைக்கு தேவையான பொருள்களை வாங்க அடிக்கடி வெளிநாட்டுக்கு சென்று வருபவர். தற்கொலை தாக்குதலுக்குச் செல்வதற்கு முன்னர் கடந்த வெள்ளிக்கிழமை வெளிநாட்டு பயணம் செல்வதாக மனைவியிடம் கூறியிருக்கிறார். ஆபிரிக்க நாடான சாம்பியாவுக்கு பொருள்கள் கொள்வனவு செய்யச் செல்வதாக கூறியிருக்கிறார். அவர்களின் உறவினர்களின் தகவல்படி, வெள்ளிக்கிழமை மாலை 6.50 மணிக்கு புறப்படும் வானூர்தியில் புறப்படவுள்ளதாக தெரிவித்தார். விடைபெறும்போது, வழக்கத்துக்கு மாறாக, மனைவியை இறுக அணைத்து, கழுத்தில் தட்டி, நீங்கள் வலுவாக இருக்க வேண்டும், என்று விடைபெற்றுள்ளார் என அங்கிருந்த உறவினர்கள் இப்பொழுது நினைவுகூறுகிறார்கள்.

தாக்குதல் தினமன்று காலையில் 7.30 மணியளவில், தொலைபேசியில் மனைவியை தொடர்பு கொண்ட அந்த நபர், சாம்பியாவிலிருந்து பேசுவதாக குறிப்பிட்டு, வந்த வியாபார அலுவல்கள் வெற்றியாக முடிந்துள்ள தாக குறிப்பிட்டுள்ளார். மனைவியுடன் பேசி சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் அவர் தற்கொலை தாக்குதலை நடத்தினார்.

அவர் தன்னையொரு தீவிரமான இஸ்லாமிய மதவாதியாக இதுவரை அடையாளம் காட்டியதில்லை. தினமும் 20 நிமிடம் செப்பு தொழிற்சாலைக்குள் நேரத்தை செலவிடுவார். அப்போது முகாமையாளருடன் மட்டும்தான் பேசுவார். ஏனையோருடன் பேசாததுடன், தன்னை தன்னை ஒளிப்படம் எடுக்கவும் யாருக்கும் அனுமதி வழங்கவில்லை.

(ஒ.5)

## தற்கொலை குண்டுத்தாக்குதல் நடத்தியவர்கள் கோழைகளே!

### கோத்தபாய காட்டம்

கொழும்பு, ஏப். 25

தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்திய கோழைகள் எவ்விதமான மனிதாபிமானம் அற்றவர்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இயேசுபிரான் உயிர்த்தெழுந்த ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று நாட்டில் இடம்பெற்ற கொடூரமான சம்பவங்கள் மிலேச்சத்தனமானவை. பல நூற்றுக்கணக்கான அப்பாவி இலங்கை மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் அதிலும் பெரும்பான்மையாக தமது குடும்பத்தினர் மற்றும் உறவுகளுடன் வழிபாடுகளிலும், கொண்டாட்டத்திலும் ஈடுபட்டவர்களை இலக்கு வைத்து இடம்பெற்ற மிலேச்சத்தனமான மற்றும் கோழைத்தனமான இந்தப் பயங்கரவாத செயலை நான் மிகவும் வன்மையாகக் கண்டிகின்றேன்.

இந்தக் குற்றங்களை மேற்கொண்ட கோழைகள் எவ்விதமான மனிதாபிமானமும் அற்றவர்கள். எந்தவொரு போதனைக்கும், சமய நம்பிக்கைக்கும் அல்லது நற்சிந்தனைக்கும் மதிப்பளிக்காதவர்கள். எமது நாட்டில் பேரழிவு, அச்சம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதே அவர்களது நோக்கமாகும்.

எவ்விதமான அச்சங்களுமின்றி, மதிப்பாக வாழும் உரிமையை அனைத்து இலங்கை மக்களும் கொண்டுள்ளதுடன், தங்களதும், தங்களுடைய அன்பிற்குரியவர்களினதும் சிறந்த எதிர்காலத்தை முன்னெடுக்கும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. துயரம், அதிர்ச்சி மற்றும் அச்ச உணர்வு எம்மத்தியில் நிலவும் இத்தருணத்தில், தேசிய நலனைப் பேணுவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். எமது நாட்டில் பேரழிவு, அச்சம் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதே அவர்களது நோக்கமாகும். எந்த வடிவிலான தீவிரவாதத்திற்கும் எமது தாய்நாட்டில் இடம் கிடையாது என்றுள்ளது. (ஒ.5)

## குண்டுகள் வெடிக்கிறது அவதானம் மகளை எச்சரித்தும் பலனில்லை

### கண்ணீருடன் தாயார்

கொழும்பு, ஏப். 25

கொழும்பில் குண்டுகள் வெடிக்கிறது அவதானமாக இருக்குமாறு மகளுக்கு கூறினேன். தான் படித்துக் கொண்டிருப்பதாகக் கூறினார். ஆனால் மாலையில் அழைப்பு எடுத்தபோது பதில் இல்லை. இறுதியில் சடலமாக எனது மகளைப் பார்த்தேன். தெஹிவளையில் உயிரிழந்த, பாணந்துறையைச் சேர்ந்த 24 வயதான பியுமி சானிகா சல்காதுவின் தாயார் தெரிவித்தார்.

விவசாய திணைக்களத்தில் உதவி முகாமையாளராக செயற்பட்ட சவ்காது, சிறி ஜெயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுள்ளார். படிப்பில் சிறந்த நிலையில் காணப்பட்டவர், தொழிலுக்கும் மிகவும் அக்கறையுடன் சென்று வருவார் என்று அவரது தாயார் கண்ணீருடன் தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற தினத்தன்று நுகேகொடை பிரதேசத்தில் வகுப்பறைக்கு சென்றிருந்தார். அன்று 11 மணியளவில் குண்டு வெடிப்பதால் (அன்று காலையில் தேவாலயங்களிலும், நட்சத்திர விடுதிகளிலும் குண்டு வெடித்திருந்தது) மகளுக்கு அழைத்து அவதானமாக இருக்குமாறு கூறினேன். பயப்பட வேண்டாம் அம்மா நான் படிக்கின்றேன் என்று மகள் கூறினார். சில மணி நேரங்களின் மீண்டும் அழைத்தேன். மகள் பதிலளிக்கவில்லை. இறுதியாக அவரை சடலமாக வீட்டுக்கு கொண்டு வந்தனர் என்று தாயார் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெகிவளையில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் காரணமாக மூன்று பேர் உயிரிழந்திருந்தனர்.

(மஒ.5)

## மருத்துவமனைக்கு பொதிகளுடன் வராதீர்

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு நோயாளர்களோ நோயாளர்களைப் பார்வையிட வருவோரோ பொதிகளை எடுத்துவர வேண்டாம் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி அறிவுறுத்தியுள்ளார். நாட்டில் நிலவும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ள நோயாளர்கள், மருத்துவர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள், பார்வையாளர்கள் என்று அனைவரின் பாதுகாப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டியதேவை உள்ளது. எனவே பொதிகளை எடுத்து வருபவர்கள் சோதனையின் பின்னரே அனுமதிக்க வேண்டிய அல்லது காலதாமதம் ஏற்படும்நிலைமையைத் தவிர்ப்பதற்காக பிரயாணப் பைகள் மற்றும் பொதிகளைத் தவிர்த்து வருவது இலகுவான பயணத்துக்கு வழிஏற்படுத்தும். தேவையற்ற அச்சத்தையும் தவிர்க்கலாம் எனத் தெரிவித்தார். (த-105)

## மன்னார் மாவட்ட மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு நேரம் குறைப்பு

மன்னார், ஏப். 25

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் வேலை நாள்களில் வெளிநோயாளர் பிரிவு சேவைகள் அனைத்தும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை மாலை 4.30 மணி வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் ரி.ஒஸ்மன் டெனி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மன்னார் மாவட்ட பொதுமருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு காலை முதல் இரவு 8 மணி வரை இயங்கி வந்தது. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக மாலை 4.30 மணியுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மாலை 4.30 மணிக்குப் பின்னர் வெளிநோயாளர் பிரிவுக்கு வருகின்ற நோயாளர்கள் நோயின் தன்மை கருதி அவர்கள் விடுதியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்படும். இதனால் ஏற்படுகின்ற இடையூறுகளுக்கு நாம் வருந்துகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-56)

## கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் கடுமையான சோதனைகள்

கிளிநொச்சி, ஏப். 25

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றுக்கு செல்லும் மக்கள் கடுமையான சோதனைகளின் பின்னரே நீதி மன்றுக்குள் அனுமதிக்கப்படுகின்ற னர்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட குண்டுவெடிப்புச் சம்பவங்களை தொடர்ந்து நாட்டின் பாதுகாப்புக்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. மருத்துவமனைகள், அரச திணை க்களங்கள் உள்ளிட்ட நிறுவனங்களுக்குச் செல்லும் மக்களின் பொதிகள் சோதனையிடப்பட்டே அனுமதிக்கப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றுக்கும் செல்லும் மக்களும், அவர்களின் பொதிகளும் கடுமையாக சோதனையிடப்படுகிறன. பொதுமக்கள் நீதிமன்றின் வாயிலில் நிறுத்தப்பட்டு சோதனையிடப்பட்டே நீதிமன்றுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். (க-214)



# 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 12 . 01 . 1985



விண்ணில் 27 . 01 . 2019

## திருமதி பிருந்தா குலதீபன்

(தாதியர் - பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை)



வரணியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் தெற்கை வாழ்விடமாகவும் கொண்ட தாதிய உத்தியோகத்தரான திருமதி பிருந்தா குலதீபன் 27.01.2019 அன்று இவ்வுலகை விட்டு நீத்தார்.

காலஞ்சென்ற பிருந்தா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (25.04.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கரணவாய் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அவரின் இறுதிச்சடங்கு நிகழ்வில் கலந்து கொண்டு அனுதாபங்களை தெரிவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் பதாகைகள், துண்டு பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலம் தமது கண்ணீர் அஞ்சலிகளை செலுத்திய உள்ளங்களுக்கும் தொலைபேசி மூலம் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் இருந்து துயர் பகிர்ந்த அன்பர்களுக்கும் விசேடமாக பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், உத்தியோகத்தர்களுக்கும் மேலும் யாழ் போதனா வைத்தியசாலை, தெல்லிப்பளை வைத்திய சாலை, அச்சுவேலி வைத்தியசாலை, சாவகச்சேரி வைத்தியசாலைகளில் இருந்து வருகை தந்து துயர் பகின்ற அன்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஜெயபவனம்
கரணவாய் தெற்கு, கரவெட்டி.

ஐ.குலதீபன் (கணவர்), கு.குயின்சிகா (மகள்)

077 722 9208

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகப் பிறப்பு 14 . 06 . 1942



விண்ணகப் பிறப்பு 26 . 03 . 2019

## அமரர் மரியா மின்னொளி ஜூலியன்

(லூர்த்துமலர்)

கடந்த 26.03.2019 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் பாசமிகு அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகைதந்து அஞ்சலி செலுத்தி செபித்த குருக்கள், துறவிகள், கார்மேல்சபை அருட்சகோதரிகள், உற்றார், உறவினர், பொதுநிலையினர், நண்பர்களுக்கும், மலர்வளையங்கள் அனுப்பியோருக்கும், எமக்கு உறுதுணையாக இருந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் 31 ஆம் நாள் நினைவு திருப்பலி இன்று (25.04.2019) வியாழக் கிழமை காலை 6.00 மணிக்கு புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் நடை பெறும். அதனைத் தொடர்ந்து எமது இல்லத்திற்கு வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்

819, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்

# நீங்கா நினைவலைகள்

25 ஆம் ஆண்டு

திருமதி
## இராஜேஸ்வரி (பபா) நாகராசா

திதி: 25.04.2019



48 ஆம் ஆண்டு



அமரர்
## செல்லப்பா நாகராசா

அன்புத்தெய்வமே – எம் ஆருயிர் குலவிளக்கே!
இறைவனடி சேர்ந்து – நீயும் இருபத்தைந்தாண்டுகள் ஆகியும்
உன் நினைவுகள் எமைவிட்டகலவில்லை!
ஊரார் மெச்சிட எங்களை வாழ வைத்த தெய்வமே!
எங்கிருந்தாலும் உன் ஆத்மா எங்களை
ஏணி போல வாழ வைக்கும் அம்மா!
ஐயனார் பாதமதில் ஐக்கியமாய் நீயிருந்து
ஒவ்வோர் நொடியும் எங்களை காத்திடம்மா!

இன்று (25.04.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

7 ஆம் வட்டாரம்,
ஊரதீவு, புங்குடுதீவு.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி தர்மலிங்கம் (இராசாத்தி)

யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி தர்மலிங்கம் 22.04.2019 திங்கட்கிழமை கோண்டாவிலில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு - அன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும் சறோமலர்தேவி, கமலராணி, யோகராசா, கலாவதி, சிவராசா, கோமதி, ஜெயகலா, தவராசா ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான தங்கச்சியம்மா, சின்னக்கிளி, பூபாலசிங்கம், ராமசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருச்செல்வம், புஸ்பநாதன், சாந்தினி, காலஞ்சென்ற குலேந்திரன் மற்றும் சிவாஜினி, செல்வநேசன், சிறிமோகன், நிரஞ்சலா ஆகியோரின் அருமை மாமியாரும் சுரேசன் - சர்மினா, ரமேஸ் - பிரசாந்தி, கஜேன், சாந்தமோகன் - பிரமினா, நிரோசன் - கௌசல்யா, கபிலன் - தனுசா, பார்த்தீபன், அனுசன், ஜசிந்தன், நிருஜா, மிதுனா, கீர்த்திகா, பிரகலாதவன், ஆகீசன், திவ்யா, ஹினிசியா, அக் ஷயன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிராம், சுஜீனா, ஹரிஸ், சரணி, மகிஷா, ஆருசி, முகாசினி, ஆதவி, அபிமன்யு ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2019) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 1.00 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நவரட்ணராஜா வீதி, கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

(CS 24321)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## பெறுகை அறிவித்தல்
### நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
### சபைநிதி - 2019

1. தவிசாளர், உள்ளுராட்சிமன்ற பெறுக்கக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப் பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மாகவும் இருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் . (தொலை பேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 25.04.2019ம் திகதியிலிருந்து 08.05.2019 ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் இடத்திலிருந்து 25.04.2019 ஆம் திகதியிலிருந்து 08.05.2019 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1000/- (வரி நீங்கலாக)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 09.05.2019 ஆம் திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்வி களை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்து ஒன்பது) நாள்கள் (27.06.2019) வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு (Rs) | செல்லு படியாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/Proc /Street Light-2019-II | வீதி விளக்குகள் கொள்வனவு செய்தல் (Monkey Set) | 0.8 | 01 மாதம் | வடக்கு மாகாண சபை/ மாவட்ட செயலகம்/ நல்லூர் பிரதேச சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 10,000.00 | 25.07.2019 |

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**25.04.2019**

(IN 10025)(14,17)

## Vacancies

### Northern Central Hospital (Private) Limited

Northern Central Hospital is a medical institution which has the privilege of providing quality patient care with compassion and unrelenting attention to clinical excellence, patient safety, passion and commitment to assure best healthcare to those we serve.

If you are truly determined, you are invited to apply for the following positions to join our team.

Ideal applicants should possess following attributes and qualifications.

**Personal Assistant to Medical Director**

- Passed G.C.E A/L Examination in any stream
- Above 20 Years of age
- Computer Literacy
- Fluent in Tamil & English Languages (Sinhala Language would be an added advantage).
- Strong communication, interpersonal skills and negotiation skills.
- Ability to co-ordinate the training Programs assigned by the management and writing the reports.
- Experience in Healthcare industry would be an added advantage.
- Salary is negotiable

**Attendants (Female, Male)**

- G.C.E O/L passed
- Above 20 Years of age
- Prior Experience in the relevant field will be preferred.
- Salary is negotiable

If you are really interested, Please send your CV before 04th May, by e-mail or post indicating the position applied for on the top left –hand corner of the envelope.

Managing Director
Northern Central Hospitals (Private) Limited
No: 342, Palaly Road, Jaffna.
Contact Number- 021 221 9988 / 021 7217324
E-mail :northernhrm@gmail.com

## மரண அறிவித்தல்



மலர்வு 27 . 04 . 1926

உதிர்வு 24 . 04 . 2019

### திருமதி மகேஸ்வரி நல்லையா

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நல்லையா நேற்று (24.04.2019) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் செல்லப்பா - தங்கம்மா தம்பதியினரின் கனிஷ்ட மகளும் காலஞ்சென்றவர்களான சொர்ணலக்ஸ்மி கீதாம்பரம் குமாரசாமி (வீதி அபிவிருத்தித் திணைக்கள மேற்பார்வையாளர்) மற்றும் பொன்னம்பலவாணர் (கனடா) ஆகியோரின அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கதிரேசு - கண்ணகைப்பிள்ளை தம்பதியின்ரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற டாக்டர் நல்லையாவின் அன்பு மனைவியும் சோமஸ்கந்தராஜா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வடமாகாணம்) காந்தரூபி ஸ்ரீஸ்கந்தராஜா (கணக்காளர் - நியூசிலாந்து) சுந்தரரூபி (கனடா) சிவரூபி (மாலா) சத்தியரூபி (கனடா), சவுந்தரரூபி (தேவா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் யோகேஸ்வரி கணேசலிங்கம் (பொறியியலாளர்) விஜிதா (கணக்காளர் - நியுசிலாந்து) செல்வகுமார் (கனடா) சந்திரகுமார் (கொழும்பு), கெங்காதரன் (கனடா) இளங்குமரன் (நீர்ப்பாசனத் திணைக்களம் மாங்குளம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெயந்தன் தட்சாணி லக்ஷியா கார்த்திகா தர்சினி நிரோசினி லக்ஷனி சங்கவி ஆரணன் தீபிகா தேனுசா அனுருதன் மைத்திரேயன் கிருஷாந் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களான கிரீசன் பிரஜீத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2019) வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**பருத்தித்துறை வீதி,**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

(CS 24834)
(14,17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 353 7857 / 077 071 0608**

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி [வெளிவாரி] - 2019
### நேர்முகத் தேர்வு பிற்போடல்

மேற்படி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையின் அடிப்படையில் 27.04.2019, 28.04.2019, 04.05.2019 மற்றும் 05.05.2019 ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த நேர்முகத் தேர்வு நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது.

நேர்முகத் தேர்விற்கான புதிய திகதிகள் பின்னர் அறியத்தரப்படும்.

மேலதிக விவரங்களுக்கு 021.222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**பதிவாளர்,**
**24.04.2019**

## மரண அறிவித்தல்

### சிவசுப்பிரமணியம் தேவதரன்



பிறப்பு 21.04.1974

இறப்பு 22.04.2019

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவ சுப்பிரமணியம் தேவதரன் 22.04.2019 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சிவசுப்பிரமணியம் - இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், நேசமலரின் அன்பு மருமகனும், ஜானகியின் அன்புக் கணவரும், சாருஜா, சானுஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், துவாரகன், சிறி, அமுதா, சசி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுமதி, பத்மாவதி, உதயன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2019) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிபிட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மருதடிப்பிள்ளையார் கோயில்,**
**நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 508 9543**

(ACH/599)(11,17)

## முக்கிய...

படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் படை அதிகாரிகள், பொலிஸார் மற்றும் அரச அதிகாரிகள் மாவட்டத்தின் பாதுகாப்புத் தொடர்பில் நேற்றுமுன்தினம் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அதில் பேசப்பட்டதற்கிணங்க பாதுகாப்பில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மாவட்ட செயலகம், முல்லைத்தீவு நகர்ப்பகுதி, மக்கள் அதிகம் கூடும் இடங்கள், பொது மருத்துவமனை, அரச திணைகளங்களின் முக்கியமான இடங்கள் என்பனவற்றுக்கு ஆயுதம் தாங்கிய படையினர் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு நோயாளர்களைப் பார்வையிட செல்வோரின் பொதிகள் சோதனையிடப்படுகின்றன. மாவட்ட மருத்துவமனை வளாகத்தில் ஆயுதம் தாங்கிய படையினர் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

முல்லைத்தீவு நகர்ப் பகுதிகளில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் மாலை நேர வகுப்புக்கும் படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். (த-ரி3)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

58 நாள். பூச்சிநீக்கி தடுப்பூசி போடப்பட்ட டொபோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

(CS 24820)(4.17)

**076 842 3358**

**தேவை**

யாழ்ப்பாணத்தில் பாடசாலை செல்லும் பிள்ளையை தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் ரூ.15000

**தொடர்பு-075 203 9589**

**பாரம்பரிய முறைப்படி உணவளிப்போம்**

கமுகு மடலில்செய்த சாப்பாட்டு தட்டுக்கள் விற்பனைக் குண்டு. நிகழ்வுகளில் பயன்படுத்த உகந்தது.

**தொடர்பு-077 316 4617**

**தந்தை செல்வநாயகம்** அவர்களின்

**42 ஆவது நினைவு நாள் நிகழ்ச்சி**

காலம் : 26.04.2019 வெள்ளிக்கிழமை

இடம் : யாழ்நகர் தந்தை செல்வா நினைவிடத்திலுள்ள நினைவிடம்

தலைமை : பேராயர் கலாநிதி சு.ஜெபநேசன் (தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு.

தந்தை செல்வா சிலைக்கு மலர் மாலை அணிவித்து சமாதியில் மலரஞ்சலி இடம்பெறும்.

- தமிழ் தேசியத்தின் தந்தை அவர்களை நினைவு கூரும் இவ் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- வழமையான "தந்தை செல்வா நினைவுப் பேருரை" இம்முறை நடைபெற மாட்டாது.
- 21.04.2019 ஞாயிற்றுக்கிழமை வெடிகுண்டுத் தாக்குதலில் உயிர்நீத்த அப்பாவி மக்களின் ஆத்மா சாந்தியடைவதற்காகவும், படுகாயமடைந்தோர் குணமடைவதற்காகவும் சமயப் பிரார்த்தனை இடம்பெறும்.

தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு

**13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர்

**நவரத்தினம் பிரகாஸ்**

(மு/மல்லாவி மத்திய கல்லூரி கணிதபிரிவு 2007)



மண்ணில் 24.02.1988 விண்ணில் 19.04.2006

திதி : 25.04.2019

பதின்மூன்று ஆண்டுகள் பறந்தோடியும் பாரினிலே நீர் வாழ்ந்த பசுமையான நாள்கள் எம், மனதை நெருட என்றும் உம் நினைவுகளுடன்

வாகையடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(CS 24834)(04.17)

குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**



**நடராஜா தில்லைவிநாயகம்**

(பிரசித்த நொத்தாரிசு, முன்னாள் தலைவர் - நல்லூர் கிராம சபை)

127. செல்லர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நடராஜா தில்லை விநாயகம் அவர்கள் நேற்று (24.04.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

127, செல்லர் வீதி நல்லூர்.

தகவல்: குடும்பத்தினர் 078 6615796, 021 222 1564

## தமிழ்...

நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்கள் மீதான தீவிரவாத நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமாயின் தமிழ் மக்களும் பாதிக்கப்படும் சூழ்நிலை காணப்படுகிறது. குண்டுத் தாக்குதலைத் தவிர்க்க அரசதலைவர் தவறிவிட்டார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற தீவிரவாத அமைப்பு உலகளாவிய ரீதியில் செயற்படுகிறது. இலங்கையிலும் தீவிரவாதத்தைத் தொடங்கியுள்ளது. 30 ஆண்டுகள் போரில் லட்சம் மக்கள் உயிரிழந்தனர். அது ஓய்ந்துள்ள நிலையில், தற்போதைய சம்பவத்தால் அச்சநிலை தோன்றியுள்ளது. தமிழ் மக்கள் மேலும் அச்சமடையும் நிலை காணப் படுகிறது.

அவசரகால நிலையை உருவாக்கி, இராணுவத்தினர் புலனாய்வுப் பிரிவினர் சோதனைகளை நடத்துகின்றபோது, தமிழ் மக்கள் பாதிக்காத வகையில் தமது சோதனைகளை நடத்த வேண்டும். ஐ.எஸ். ஐ.எஸ் அமைப்பு முஸ்லிம் அடிப்படைவாதிகளாக இருக்கின்ற நேரத்தில் இந்த நாட்டில் இருக்கும் முஸ்லிம்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

பன்னாடுகளின் தலையீடுகள் இலங்கையில் அதிகரிக்கவுள்ளன. 2001ஆம் ஆண்டு ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாத அமைப்பால் அமெரிக்கா பாதிக்கப்பட்டிருந்தது. அதன்பிறகு தான் உலகம் முழுவதும் பயங்கரவாதத்தைத் தடை செய்வதற்கான அறிவிப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ்வாறான நிலையில், அமெரிக்கா இலங்கைக்கு உதவுவதாக கூறியிருப்பதா லும் தீவிரவாதிகள் இலங்கையில் அதிகமான நடவடிக்கையில் ஈடுபட வாய்ப்புக்கள் உள்ளன.

இந்த நிலமைகளை கருத்திற்கொண்டு, எமது அரசியல் நடவடிக்கைகளையும், இனப்பிரச்சினைக்கான நடவடிக்கைகளையும் புத்திசாலித் தனமாகவும், தந்திரோபாயமாகவும் திட்டவட்டமாக நடைமுறைப்படுத்தவேண்டியுள்ளது - என்றார். (த-106)

## தாழமுக்கம்...

ளுக்கு இலங்கை, தமிழ்நாடு மற்றும் மியன்மாரில் மழை வீழ்ச்சிக்கு இடம் உண்டு என்று வானியல் ஆய்வு நிலையம் எதிர்வு கூறியுள்ளது. இலங்கை மற்றும் தமிழ்நாட்டில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி ஏற்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. அத்துடன், மீனவர்கள் கடலுக்குச் செல்வதில் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## பாடசாலை...

கதவுகள் மூடப்பட்டிருக்க வேண்டும். வெளியார் எவரும் அனுமதியின்றி உட்பிரவேசிக்க அனுமதிக்கவே கூடாது. பெற்றோர் என்று கூறி வருபவர்கள்கூட உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தேவை ஏற்படின் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படவேண்டும்.

இவ்வாறு, வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் வடக்கின் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கண்டிப்பான அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

பாடசாலைகள் மீள ஆரம்பிக்கும் சமயம் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண தலைமைச் செயலர் அ.பத்திநாதன் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

அதில் வடக்கு மாகாணத்தின் 12 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் ஆகியோருடன் வடக்கு மாகாண ஆளுநரின் செயலரும் கலந்து கொண்டிருந்தார்.

நாட்டின் சகல பாடசாலைகளும் எதிர்வரும் 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

எவராயினும்சரி பொதிகளுடன் பாடசாலை வளாகத்துக்குள் அனுமதிக்கப்படக் கூடாது. வகுப்புக்கள் இடம்பெறும் அதேநேரம் வெளிப் பாதுகாப்புத் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலை வரவு, விடுகைக் கண்காணிப்பு என அனைத்து விடயங்களும் அதிபர் ஊடாக உறுதிப்படுத்தல் மிக முக்கியமானது. ஏதும் அசம்பாவிதம் இடம்பெறாதவகையில் முன்னாயத்த நடவடிக்கைகள் எடுப்பதனை உறுதி செய்வது கட்டாய பணி என்று தலைமைச் செயலர் அறிவுறுத்தியுள்ளார். (த-105)

## மன்னாரில்...

இவ்வாறு மாவட்டத்தின் 54 ஆவது பிரிகேட் கொமாண்டர் பொலிஸ் அதிகாரிகள், மாவட்டச் செயலர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் நேற்று அவசர கலந்துரையாடல் இடம்பெற்றது. அதில் தீவிரவாதச் செயல்கள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்குள் அந்நிய நாட்டவர்கள் திருட்டுத்தனமாக ஊடுருவும் வாய்ப்புக்கொண்ட மாவட்டங்களில் முக்கிய மாவட்டமாக மன்னார் காணப்படுகின்றது. குறிப்பாக ஆப்கான் நாட்டவர்கள் மன்னார் மாவட்டம் ஊடாக ஊடுருவலாம் என்று அஞ்சப்படுகின்றது. அதனால் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

இதேவேளை, தீவிரவாதச் செயல்களில் ஈடுபடுவோர் ஊடுருவி மறைந்திருக்கக் கூடிய இடங்களாகவும் சில பகுதிகள் இனம்காணப்பட்டுள்ளன. அவ்வாறான இடங்களில் உடனடியாகச் சோதனை இடம்பெறும். இதற்காகச் சுற்றி வளைப்புக்கள், சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களின்போது எம்மோடு நின்றவர்களே இன்று சந்தேக நபர்களாகக் காணப்படும் துரதிஸ்டமும் உள்ளது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்காதீர்கள்.

வர்த்தக நோக்கமாகவோ வேறு நோக்கமாகவோ முகம் அறியாதவர்களுக்கு வீடுகளை வாடகைக்கு வழங்க வேண்டாம். மீறி வழங்குவதால் ஏற்படும் பாதிப்புக்களை வீட்டின் உரிமையாளர்களும் சந்திக்க நேரிடலாம். சந்தேகத்துக்கிடமானவர்கள் தொடர்பில் உடன் தெரியப்படுத்த வேண்டும். மறு அறிவித்தல் வரையில் அதிக மக்கள் கூடும் எந்த நிகழ்வுகளையும் நடத்த வேண்டாம்.

சமய வழிபாடுகளிலும் அதிக மக்களை ஒன்றுசேர்வதைத் தவிருங்கள். தவிர்க்க முடியாத நிகழ்வுகளுக்கு அருகில் உள்ள பொலிஸாரிடம் தெரிவித்து அனுமதி பெறுங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் சுமார் 500 வீடுகள் ஆள்களின்றியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (த-105)

## ரிஷாத்...

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், மேல் மாகாண ஆளுநர் அஸாத் ஹாலி, கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் நேரடித் தொடப்புகளை வைத்திருந்துள்ளனர். தேசிய புலனாய்வுத் தகவல்களும் இதனைத் தற்போது உறுதிப்படுத்தியுள்ளன. இவர்களுக்குத் தெரியாமல் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றிருக்க வாய்ப்பில்லை. எனவே, இவர்கள் நால்வரினதும் பதவிகளைப் பறித்து இவர்களை உடன் அரசு கைதுசெய்ய வேண்டும்.' இவ்வாறு வலியுறுத்தியுள்ளது மகிந்த அணி.

இது தொடர்பில் மகிந்த அணியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று மேலும் தெரிவித்ததாவது:

'தௌஹீத் ஜமா அத் அமைப்பின் மத வெறியாலும் கொடூரத் தாக்குதல்களினாலும் முஸ்லிம் சமூகமே இன்று வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் சிலர் பிரபல வர்த்தர்கள் என்ற போர்வையில் நாட்டை நாசமாக்கியுள்ளார்கள். அப்பாவிக் கிறிஸ்தவ மக்களைக் கொன்று ஒழித்துள்ளார்கள். இந்த நாசகார வேலைகளுக்குத் துணைபோனவர்களுக்கு ஒருபோதும் மன்னிப்பு வழங்கக்கூடாது.

தௌஹீத் ஜமா அத் அமைப்பினருடனும் அவர்களின் மதவெறித் தாக்குதல்களுக்குத் துணைபோனவர்களுடனும் நேரடித் தொடர்புகளை வைத்திருந்த ரிஷாத் பதியுதீன், முஜிபுர் ரஹ்மான், அசாத் சாலி, ஹிஸ்புல்லா ஆகிய நான்கு அரசியல்வாதிகளையும் உடன் கைதுசெய்வதற்குரிய நடவடிக்கைகளை அரச தலைவரும், தலைமை அமைச்சரும் எடுக்கவேண்டும். இல்லையெனில், அரச தலைவரும், தலைமை அமைச்சருமே இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிவரும்.


மகிந்த ஆட்சியில் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது. இது அனைவருக்கும் தெரிந்த விடயம். 2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தின் பின்னர்தான் நாட்டுக்குள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் ஊடுருவல் இடம்பெற்றுள்ளதுடன் தௌஹீத் ஜமா அத் அமைப்பின் அடாவடியும் தலைவிரித்தாடியுள்ளது. இது குறித்து அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மௌனத்தைக் கலைத்து உண்மை நிலைவரத்தை நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

தாக்குதல்கள் தொடர்பில் தேசிய புலனாய்வுத்துறை எச்சரிக்கை விடுத்திருந்தும் பாதுகாப்பு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் இருந்தமை எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. பொறுப்பானவர்கள் இதற்குப் பதில் கூறியே ஆகவேண்டும்' - என்றார்.

இதேவேளை, தேசிய தௌஹீத் ஜமா அத் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த அரசியல்வாதிகள் மற்றும் முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் நேற்று சபையில் உரையாற்றும்போது தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-22

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னட்டி
**மார்க்கண்டு**
(மயிலிட்டி)



**தோற்றம்**
**18.12.1932**

**மறைவு**
**28.04.2016**


எண்பத்து நான்கு ஆண்டுகள் இப்புவியில்
ஏற்றமுடன் வாழ்ந்திருந்தீர் ஐயா!
அதில்
ஐம்பது ஆண்டுடன் எட்டு மாதங்கள்
இல்லறத்தில் இனிதே இணைந்திருந்தீர் ஐயா!
இப்போது
மூன்றாண்டுகள் முழுவதுமாய் இறைவன்
திருவடியில் இளைப்பாறுகின்றீர்கள் ஐயா!
மூவாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் இதயத்தில் நிலைத்திருப்பீர் ஐயா!
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

"அட்ஷய பவனம்"
ஆனைக்குட்டி மதவடி,
தெல்லிப்பழை.

உங்கள் நினைவுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்.

## மரண அறிவித்தல்

# கார்த்திகேசு முத்துலிங்கம்
## (கம்மாலை முத்துலிங்கம்) ஆசாரி



**பிறப்பு** 21.03.1951 **இறப்பு** 23.04.2019

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இராமகிருஷ்ணலேன் கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு முத்துலிங்கம் 23.04.2019 (செவ்வாய்க்கிழமை) இறைபதமடைந்து விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
(CS 223394) (14,17)

**077 948 3331/ 077 086 9678**

## மரண அறிவித்தல்

# அண்ணாச்சாமி துரைலிங்கம்

**(சுஜிகலையக உரிமையாளர்)**



பருத்தித்துறை மாதனையைப் பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுஜி கலையக உரிமையாளர் அண்ணாச்சாமி துரைலிங்கம் கடந்த (21.04.2019) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி நேசரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சந்திர காந்தாவின் ஆருயிர் கணவரும் பிரதீபன், (சுவிற்சர்லாந்து) சுகந்தினி (சுஜி . சுஜி அழகுக்கலையகம்), ஜீவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுந்தரலிங்கம் (சுவிற்சர்லாந்து), சிவலிங்கம் (சுவிற்சர்லாந்து) ஆகியோரின் மூத்த சகோதரனும் சாந்தரூபன் (முகுந்தன்), பிரபு சுகன்யா ஆகியோரின் மாமனாரும் சாழினி, கர்னிகா, கிருஷிகா சாருகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.04.2019) வியாழக்கிழமை ஈமச்சடங்குகள் நிறைவேற்றப்பட்டு பி.ப 1.00 மணியளவில் கோரியடி இந்துமயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவிலடி, மாதனை,**
**பருத்தித்துறை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 717 5578, 077 1513 999**

## தென்னை நாற்று விற்பனைக்கு

3½ ஆண்டு, 5 ஆண்டுகளில் பயன்தரக்கூடிய நல்ல இன தென்னை நாற்றுக்கள் பொதி செய்யப்பட்டவை மற்றும் பொதி செய்யப்படாதவையாக வேண்டிய எண்ணிக்கையில் பெற்றுக் கொள்ளலாம்.
(CS 24922)(04,17)

**076 703 5634**

## விற்பனைக்குண்டு

கிரான்சி சிவபுரம் பூநகரியில் 5000 தென்னங்கன்றுகள் விற்பனைக்குண்டு.
(CS 24919) (04,17)

**077 940 9519 கேதீஸ்வரன்**

## மரண அறிவித்தல்



**பிறப்பு** 14 . 01 . 1949
**இறப்பு** 24 . 04 . 2019

# திருமதி பாக்கியராதா மாணிக்கவாசகர்

முருகன் வீதி, பழம்சந்தி, திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியராதா மாணிக்கவாசகர் 24.04.2019 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும், மகேந்திரன், மகேஸ்வரி, நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுகந்தன் (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்) அவர்களின் பாசமிகு தாயும், சுகுணா (ஆசிரியை - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அவர்களின் அன்பு மாமியும், தக்சாயனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2019) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செலப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகன் வீதி,**
**பழம் சந்தி, திருநெல்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# சிற்றம்பலம் நந்தகுமார்



இல.12, புதுச்செட்டித்தெரு, கொட்டாஞ்சேனை . கொழும்பு 13 ஐ பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம் காளிகோவிலடி நயினாதீவு மற்றும் 880/4 K.K.S வீதி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் நந்த குமார் கடந்த (23.04.2019) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான திரு.திருமதி சிற்றம் பலம் (சிறாப்பர்) தையலம்மா தம்பதிகளின் ஏகபுதல்வனும் யோகேஸ்வரி, கேதீஸ்வரி, திலகேஸ்வரி, மங்களேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் யோகலிங்கம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), தெய்வேந்திரராஜா, லிங்கேஸ்வரன், பத்மநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அபிராமி ஸ்ரீஸ்கந்தராஜன், அரவிந்தன், பூரணி, துஸ்யந்தன், ரோகிணி பிரகாஸ், தேனுகா, துர்க்கா,லித்திகா, சாதனன், நிலக் ஷன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2019) வியாழக்கிழமை மு.ப 8.00 மணியளவில் அன்னாரின் இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக்கிரி யைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு ஏடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**880/4 K.K.S வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: வீ.வை.யோகலிங்கம்**
**(மைத்துனர்)**
**0771948052**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## மரண அறிவித்தல்

# கதிரவேலு பாலசிங்கம்



யாழ். கொட்டடியைப்பிறப்பிடமாகவும் யாழ்.மத்தியூஸ் வீதியைவசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பாலசிங்கம் கடந்த (23.04.2019) செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஜேம்ஸ் சின்னத்துரை - றோஸ்மலர் தம்பதியினரின் அன்பு மருமகனும் மேரி மரினாவின் அன்புக்கணவரும் சுரேஸ் றொனால்ட் (பிரான்ஸ்) றக்சன் (டோகா), தயான் (பிரான்ஸ்), தனுஜன் (டுபாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீனா, மேரிஸ்ரெலாவின் அன்பு மாமாவும் டியோனிக்கா, ரித்திஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இல. 25/2 மத்தியூஸ் வீதி இல்லத்திலிருந்து இன்று (25.04.2019) பிற்பகல் 2.30 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு யாழ் மரியன்னை பேராலயத்தில் ஆசீர்வதிக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.25/2 மத்தியூஸ் வீதி**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

# கேள்விஅறிவித்தல்

## பிரதேசசெயலகம் - யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் **பிராந்திய பெறுகைக்குழுவின் தவிசாளர்** கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட மூடிய விலைக்கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. இது **தேசிய போட்டி விலைக்கேள்வி முறையாக** இருந்தாலும் **வட மாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
3. கேள்விகோரல் அறிவித்தலில் குறிப்பிட்ட தரத்துக்கு கேள்விகள் கிடைக்காதுவிடின் அல்லது கிடைக்கப்பெற்ற கேள்விகள் தகுதியற்றதாயின் அதற்கு மேற்பட்ட CIDA தரம் கருத்திலெடுக்கப்படும்.
4. நிர்மாண ஒப்பந்தத்திற்கு தகுதியுடைய ஒப்பந்தக்காரர், நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாணத் தரத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் மோசடியில் ஈடுபட்ட ஒப்பந்தக்காரர்களின் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இருத்தல் வேண்டும்.
5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் பிரதேச செயலக கணக்கு கிளையிலும், எமது பிரதேச செயலக இணையத்தளத்திலும்(www.jaffna.ds.gov.lk ) கேள்விப்பத்திரங்களை பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் மேலும் ஒரு வேலைக்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் :021 222 5425/ 021 221 7387 Fax – 021 222 5425, Gmail address - acctjaffna@gmail.com
6. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய **( Non refundable fee )** அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை **பிரதேச செயலகம் - யாழ்ப்பாணத்திலுள்ள கணக்கு கிளையில்** செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து **25.04.2019 தொடக்கம் 07.05.2019 வரை மு.ப 9.00** மணியிலிருந்து **பி.ப 03.00** மணி வரை அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.
7. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித் தொகைகளுக்கான கேள்விப்பிணைப் பொறுப்பு (Bid Security) கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு **தவிசாளர், பிராந்திய பெறுகைக்குழு, பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **08.05.2019 பி.ப 03.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ பிரதேச செயலக கேள்விப் பத்திரப் பெட்டியில் இடப்பட வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**, வேலைவிபரத்தினையும் **(Description of work)** குறிப்பிடல் வேண்டும். கேள்விகள் சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் அன்றைய தினமே **பி.ப 3.30 மணிக்கு பிரதேச செயலக சிறு மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படும்** என்பதுடன் தாமதமாக கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலே நிராகரிக்கப்படும்.
8. விலைக்கேள்வி செல்லுபடிக்காலம் **(Bid Validity)** கேள்வி பெறும் இறுதித் திகதியிலியிருந்து அல்லது நீடிக்கப்படும் திகதியிலிருந்து **90** நாட்களும், கேள்விப் பிணைப்பொறுப்பு **(Bid Security)** கேள்விதிறத்தல் திகதியிலிருந்து **120 நாட்களும்** ஆகும்.
9. முற்கேள்விக் கூட்டம் **(Pre bid Meeting) 03.05.2019.** பி.ப **02.30** மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறும்.
10. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

| S.No | Bid ID | Description of work | Estimated Amount (Million) (Excluding VAT) | Business Registration, Specialty | Required Bid Security | | Non Refundable Fee(Rs.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount (Rs.) | Validity Period Until | |
| 1 | DS/J/PRO/Road/P01/2019 | Renovation of Vasanthapuram cross road, Colombuthurai 1st lane, 3rd cross road, Valanpuram 9th cross road, Valanpuram Temple Road and AV Road sub lane. | 4.73 | C-8 or Above (Highways) | 48,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 2 | DS/J/PRO/Road/P02/2019 | Renovation of Muththaiya Bakery lane, Colombuthurai road cross lane, Pettrer lane and Co - oprative bylane, Kachcheri Nallur post office lane, Kachcheri nallur sub lane, Maruthady lane 6th cross and Maruthady 2nd cross road. | 4.49 | C-8 or Above (Highways) | 45,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 3 | DS/J/PRO/Road/P03/2019 | Renovation of Rajendra road, St.James east road, St.James lane, Sinnakadai road, old park sub road and Pillaiyar 7th cross road | 4.68 | C-8 or Above (Highways) | 47,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 4 | DS/J/PRO/Road/P04/2019 | Renovation of Muslim college cross road, Katkulam cross road, Nawanthurai school back lane (side road), Kalaivani community centre playground near road, Kannapuram 1st, 2nd, and 3rd lanes, Kannapuram 4th and 5th lanes, and Manpiddy 1st, 2nd lane Kannapuram | 4.11 | C-8 or Above (Highways) | 42,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 5 | DS/J/PRO/Road/P05/2019 | Renovation of beach road, NMS lane,Navalar road, NewMoor street 2nd cross road, and Seliyan road sub lane | 3.83 | C-8 or Above (Highways) | 39,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 6 | DS/J/PRO/Drainage/P06/2019 | Renovation of Thurayappa Maha Vidi.Ground Drainage path way work, Muthlikkulam outlet channel work, Old park road channel work, Thevarikkulam outlet drainage channel work, Maruthady road drainage channel work | 4.48 | C-8 or Above (Strom water disposal and land drainage) | 45,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 7 | DS/J/PRO/Drainage/P07/2019 | Renovation of Pointpedro road 1st lane drainage work, Temble road sub lane drainage channel wall work, Menadchchi amman road drainage channel wall work St.Partick's road drainage turn out work, 2nd cross road (sea side) drainage channel work | 4.91 | C-8 or Above (Strom water disposal and land drainage) | 50,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 8 | DS/J/PRO/Drainage/P08/2019 | Renovation of Kannathiddy drainage channel wall work, Villundri tempe road drainage channel work | 4.08 | C-8 or Above (Strom water disposal and land drainage) | 41,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 9 | DS/J/PRO/Drainage/P9/2019 | Renovation of Konanthodda road drainage channel wall work and Araly road drainage channel work to Rajalikulam | 4.67 | C-8 or Above (Strom water disposal and land drainage) | 47,000.00 | 05.09.2019 | 2,000.00 |
| 10 | DS/J/PRO/Drainage/P10/2019 | Renovation of nedunkulam drainage channel (Katheeja school Katkulam channel) wall work and kalaivani ground east side drainage channel work | 3.29 | C-8 or Above (Strom water disposal and land drainage) | 33,000.00 | 05.09.2019 | 2,000.00 |

எஸ். சுதர்சன்,
பிதேச செயலர்,
பிரதேச செயலகம்,
யாழ்ப்பாணம்.


## முக்கிய அறிவித்தல்

NGC
Northern Group of Com
No.340, K.K.S Road,
Jaffna.

CUSTOMER SERVICE
021 790 4574



எமது நிறுவனத்தில் முகாமையாளராக கடமையாற்றிய 4 ஆம் கட்டை, கூழாவடி, மானிப்பாய் எனும் முகவரியில் வசிக்கும் ஜோன் கிறிஸ் ஆனந்தராஜா (J.C.A.RICHMAN) (810804203V) என்பவர் ஒழுக்காற்று நடவடிக்கை காரணமாக எமது நிறுவனத்திலிருந்து பதவி விலக்கி வெளியேற்றப்பட்டுள்ளார். இவர் இனிவரும் காலங்களில் எமது நிறுவனத்தின் பெயரில் செய்யப்படும் பணக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் விளம்பரப்படுத்தல் விற்பனை தொடர்பான எந்த விதமானசெயற்பாடுகளுக்கும் எமது நிறுவனம் பொறுப்பேற்கமாட்டாது என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**NORTHERN GROUP OF COM**
தலைமை நிர்வாக அதிகாரி
**A.Dinesh**

## உயிர் காக்க உதவுவோம்

இரு சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட நிலையிலுள்ள ஒருவருக்கு $(0^+)$ சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. இதனைத் தந்து ஒரு உயிரைக் காப்பாற்றுமாறு நல்லுள்ளங்களை வேண்டி நிற்கின்றோம்.

(N 10024)(4.17)

**077 923 5748/077 869 6359**

கொடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 434 சீட்டிழுப்பு திகதி 2019.04.23
வர்ணம்: இளஞ்சிவப்பு செவ்வாய்க்கிழமை
O 15 17 27 35
ரூ. 122,021,878/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 960
சீட்டிழுப்பு திகதி 2019.04.22 திங்கட்கிழமை
F 21 22 47 66
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
ஊதா, பச்சை, நீலம், சிவப்பு நிற டிக்கட்டுகள் முறையே திங்கட்கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

උත්තියෝගபூர்வ முடிவுகள்
සංවර්ධන වාසනාව
239
சீட்டிழுப்பு திகதி 24.04.2019
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 09 44 66
விதி எண் 07
ரூ.16,012,184
27.04.2019 சனிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.04.2019 வெற்றி வாரம் 2503 வர்ணம் பச்சை
மகரம்
வெற்றி இலக்கங்கள் 06 31 39 46
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,103,446
25.04.2019ம் திகதி வியாழக் கிழமை கபில நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:3175 திகதி:2019.04.24 புதன்கிழமை
ஊதா
SATURDAY FORTUNE
03 55 66 68 A 26
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட் 40,039,700/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 590
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2019.04.24
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,795,275/-
வெற்றி இலக்கங்கள் 01 27 68 71 K
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

# துக்கதினம் கடைப்பிடிப்பு அரைக்கம்பத்தில் கொடிகள்


உடுவில் பிரதேச செயலகம்


யாழ்ப்பாண நீதிமன்ற வளாகம்



யாழ்ப்பாண மாவட்டச் செயலகம்

யாழ்ப்பாணம், ஏப். 25
பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டோருக்காகத் துக்கதினம் வடக்கு மாகாணம் உட்பட நாடு முழுவதும் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. அரச நிறுவனங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தன. நேற்றைய தினத்தைத் துக்க தினமாகக் கடைப்பிடிக்குமாறு அரசு அறிவித்ததன்படி துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

**யாழ்ப்பாண வர்த்தகர்கள்**
யாழ்ப்பாண வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களுக்கு முன்பாக கறுப்பு மற்றும் வெள்ளை நிறக் கொடிகளை ஏற்றி தமது துக்கத்தை வெளிப்படுத்தினர்.

**நீதிமன்று**
கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் முதலாவது குண்டு வெடித்த நேரமான காலை 8.45 மணிக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், தேசிய துக்க நாளுக்கான தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் ஏற்றிவைத்தார்.
தொடர்ந்து உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து 3 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட நீதிபதி வி.இராமகமலன், யாழ்ப்பாண நீதிவான் அந்தோனி சாமி பீற்றர் போல், நீதிமன்ற அலுவலர்கள் அதில் இணைந்திருந்தனர்.

**மாவட்டச் செயலகம்**
துக்க தினத்தைக் கடைப்பிடிக்கும் வகையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் காலை 8.45க்கு தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது. கொல்லப்பட்டவர்களுக்காக 3 நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.


திருகோணமலை

**கிளிநொச்சி**
கிளிநொச்சியிலும் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டு அஞ்சலிகள் இடம்பெற்றன. கிளிநொச்சி மாவட்டச் செயலகம், நீதிமன்றம் மற்றும் அரசதிணைக்களங்களில் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டன. அஞ்சலியும் இடம்பெற்றிருந்தன.


யாழ்.நகர்


கிளிநொச்சி மாவட்டச் செயலகம்

**வவுனியா**
வவுனியாவிலும் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. வவுனியா மாவட்டச் செயலகத்தில் காலை 8.30 மணிக்கு தேசியகொடி அரைகம்பத்தில் பறக்கவிடப்பட்டு மூன்று நிமிடங்கள் மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது. வவுனியா பிரதேச செயலகம் உள்ளிட்ட பல திணைக்க ளங்களிலும் இவற்றை அவதானிக்க முடிந்தது.
இதேவேளை, வவுனியா வர்த்தக நிலையங்கள், முச்சக்கரவண்டிகள், வீதிகள் பலவற்றிலும் கறுப்பு கொடிகள் பறக்கவிடப்பட்டன.


மட்டு. மாவட்டச் செயலகம்

**மன்னார்**
மன்னார் மாவட்டச் செயலகத்தில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டு துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது. மூன்று நிமிடங்கள் அஞ்சலி செலுத்தப்பட்டது. மன்னார் பஸார் பகுதியில் உள்ள பல்வேறு வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. வர்த்தக நிலையங்களில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

**மட்டக்களப்பு**
மட்டக்களப்பு மண்முனை தென் மேற்கு பிரதேசத்திலும், வெள்ளை, கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. அம்பிளாந்துறை சந்தியில் தங்கச் சகோதரர்கள் அமைப்பு அஞ்சலி செலுத்தியது. முனைக்காடு மற்றும் பிரதேசத்தின் சந்திகளிலும் வெள்ளைக்கொடிகள் தொங்கவிடப்பட்டுள்ளன. வழமையைவிட போக்குவரத்துக்கள் குறைவாகக் காணப்பட்டன. வர்த்தக நிலையங்களில் கறுப்பு வெள்ளைக்கொடிகள் பறக்கவிடப்பட்டன.

**திருகோணமலை**
திருகோணமலையில் இரண்டாவது நாளாகவும் பல வர்த்தக நிலையங்கள் நேற்று மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளிலும், அரச திணைக்களங்களிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. தமிழ், முஸ்லிம், சிங்கள பகுதிகளில் கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன.

**மலையகம்**
மலையகம் முழுவதும் மக்கள் தொழிலுக்குச் செல்லாது கண்ணீர் மல்க மெழுகுவர்த்தி ஏந்தி, உயிர் நீத்த உறவுகளுக்காக துக்கம் கடைப்பிடித்தனர். கொட்டகலை, ஹற்றன், மஸ்கெலியா, பொகவந்தலாவ, நோர்வூட், அக்கரபத்தனை, தலவாக்கலை, நுவரெலியா போன்றபகுதிகளிலும் துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டது.
இன்றைய தினத்தையும் துக்க தினமாகக் கடைப்பிடிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.
(து-37,56,110,214)


## சாவகச்சேரி பொதுச் சந்தையை மூடி சாவடைந்த மக்களுக்கு அஞ்சலி



சாவகச்சேரி ஏப். 25
சாவகச்சேரி பொது சந்தையின் அனைத்து வியாபாரிகளும் நாட்டில் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின்போது சாவடைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று தமது வியாபாரத்தை மூடி மெழுகுதிரி ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.
இதனால் சந்தையின் அனைத்துப் பிரிவுகளும் மூடப்பட்டிருந்தன. நேற்று சந்தை இயங்காது என வியாபாரிகள் அறிவித்திருந்ததால் உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருள்களை சந்தைக்கு கொண்டு வரவில்லை.
இதேவேளை கடலுணவு சந்தை மூடப்பட்டிருந்த போதிலும் அருகில் உள்ள மரநிழலில் கடலுணவுக்கள் விற்பனை செய்யப்பட்டதைக் காணமுடிகிறது. நகரப் பகுதியில் உள்ள வணிக நிலையங்கள் அனைத்தும் திறந்திருந்தன. துக்க தினத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களின் முன்னால் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டிருந்தனர். கொடிகாமம், கைதடி, வரணி ஆகிய பொதுச் சந்தைகள் மற்றும் வணிக நிலையங்கள் வழமை போல நேற்று இயங்கின. (க-9)

# கொல்லப்பட்டோருக்காக அஞ்சலிகள்


வவுனியா




பூந்தோட்டம்


கிளிநொச்சி


பதுளை


மலையகம்

யாழ்ப்பாணம், ஏப். 25
பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களுக்கு வடக்கு உட்பட நாடு முழுவதும் பல்வேறு இடங்களிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்று வருகின்றன. அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

**யாழ்ப்பாணம்**
யாழ்ப்பாண மரியன்னை தேவாலயத்தில் நேற்றுமுன்தினம் காலை 8.15 அளவில் வழிபாடுகளுடன், மெழுவர்த்தி ஏந்தி இரண்டு நிமிட அஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்த னையும் இடம் பெற்றது.
இந்துக் கோவில்கள் பலவற்றிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு, பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

**கிளிநொச்சி**
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது. சமயத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். உயிரிழந்த மக்களுக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்வணக்கம் செலுத்தப்பட்டது. உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டன.

**வவுனியா**
வவுனியா பூந்தோட்டம் சந்தியில் உள்ள வர்த்தகர்கள் நேற்று அஞ்சலி செலுத்தினர். வர்த்தகர் லோரன்ஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பூந்தோட்டம் சந்தியைச் சேர்ந்த அனைத்து வர்த்தகர்களும் கலந்துகொண்டனர்.
உயிரிழந்தவர்களுக்கு இரு நிமிடங்கள் மௌனஅஞ்சலி செலுத்தப்பட்டது. மெழுகு வர்த்தி ஏற்றி மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
உயிரிழந்தவர்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், அஞ்சலி நிகழ்வும் வவுனியா குட்செட்வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் சிவசிறி பிரபாகரக் குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஆலயத்தின் பரிபாலன சபை, அந்தணர் ஒன்றியம், தமிழ் விருட்சத்தின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
உயிரிழந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, நெய் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. அரசியல்வாதிகள், அறிஞர்கள் கலந்து கொண்டனர்.

**மலையகம்**
மலையகம் செனன் தோட்ட பொதுமக்கள் நேற்று முன்தினம் அஞ்சலி செலுத்தினர். தோட்ட பொதுமக்கள், இளையோர், சிறார்கள் இதில் கலந்து கொண்டனர்.
ஹாலிஎல வீரசித்தி விநாயகர் ஆலய இந்துபரிபாலன சங்கம் மற்றும் இந்து இளைஞர் மன்றம் ஆகியவற்றின் தலைவர்கள் இணைந்து ஹாலி எல பௌத்த விகாராதிபதி, ஹாலிஎல பள்ளிவாசல் அஷறத் (மௌலவி) ஆகியோரின் பங்குபற்றலில், மூவின மக்களின் ஒன்றிணைவுடன் ஹாலி எல வீரசக்தி விநாயகர் ஆலய முன்றலில் இரங்கல் பிரார்த்தனை இடம்பெற்றது. (த-37,106,110)




## தீவிரவாதத் தாக்குதலால் கொல்லப்பட்ட மக்களுக்கு பரந்தனில் அஞ்சலி

முல்லைத்தீவு.ஏப்.25
தீவிரவாதத் தாக்குதல் காரணமாக இலங்கையில் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்ட மக்களுக்கான அஞ்சலி நிகழ்வு மிகவும் உணர்வுபூர்வமாக பரந்தன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில் பரந்தன் நகர பேருந்து நிலையத்தில் நடைபெற்றுள்ளது.
கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் நீர்கொழும்பு கட்டுவன் பிடின் புனிதசெபஸ்தியார் ஆலயம் மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் உள்ளிட்ட தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு பூசை வழிபாட்டில் ஈடுபட்டிருந்த அப்பாவிப் பொதுமக்களை இலக்கு வைத்தும், விருந்தினர் விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பயணிகளை இலக்கு வைத்தும் மற்றும் வீதிகளில் பயணித்த பொதுமக்களை இலக்கு வைத்தும் இஸ்லாமிய தீவிரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பு இலங்கையைச் சேர்ந்த இஸ்லாமிய பயங்கரவாத அமைப்புடன் இணைந்து மேற்கொண்ட மனிதவெடிகுண்டுத் தாக்குதல்கள் மூலம் கொடூரமாகக் கொல்லப்பட்ட அனைவருக்குமான அஞ்சலி இதய வணக்க நிகழ்வு பரந்தன் வர்த்தக சங்கத்தின் ஒழுங்கமைப்பில், பரந்தன் வர்த்தகர்களாலும் பரந்தன் வாழ் மக்களாலும் பரந்தன் நகர் பேருந்து நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு நேற்றுக் காலை 9 மணிக்கு மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றுள்ளது.
முஸ்லிம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களுக்கான அஞ்சலி நிகழ்வுக்காக பரந்தன் நகர வர்த்தகர்கள் இன்று காலை 10 மணிவரை தமது வர்த்தக நிலையங்களை கதவடைப்புச் செய்து கறுத்தக்கொடிகளைப் பறக்கவிட்டு தமது அஞ்சலிகளைச் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-426)

## மல்லாவி வர்த்தகர் சங்கத்தால் அஞ்சலி

மல்லாவி.ஏப்.25
ஈஸ்டர் தினத்தன்று கொழும்பின் பல பகுதிகளில் நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டவர்களுக்கு மல்லாவி வர்த்த்கர் சங்கத்தினரால் அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி நேற்றைய நாளை துக்க நாளாக கடைப்பிடித்தனர். (க-74)






## உயிரிழந்தோருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஏப்.25
நாட்டின் பல்வேறு பாகங்களில் இடம்பெற்ற மனித நேயமற்ற குண்டுத் தாக்குதல்களின்போது சாவடைந்த மக்களுக்கு கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.
நிலைய தலைவர் கு.மதுசுதன் தலைமையில் நேற்று முன்தினம் மாலை 6.15 மணியளவில் மலர் தூவி மெழுகுவர்த்திகள் ஏற்றி அஞ்சலித்ததோடு, இரு நிமிட ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.
இதன்போது நிலைய உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (க)

## திருமலையில் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி

மூதூர்,ஏப்.25
நாட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிர்நீத்த உறவுகளுக்கு திருகோணமலை மத்திய பேருந்து நிலையத்தின் அருகில் அமைந்துள்ள சமாதான தூபிக்கு முன்னால் அஞ்சலி செலுத்தப்பட்டது.
திருகோணமலை மக்கள் நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு மெழுகுவர்த்தி ஏந்தி உணர்வுபூர்வ இந்த அஞ்சலியைச் செலுத்தினர். (க-40)



## அறிமுகமில்லாதவர்களுக்கு

# வீடு, காணி வழங்குவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்

### வடக்கு மாகாணசபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.25

அண்மைக் காலமாக அதிக வாடகையைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடுகள் மற்றும் கட்டடங்களை வழங்குவதையும் அதிக பணத்தைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டுகாணிகள், வீடுகள், கட்டடங்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதையும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பல சந்தர்ப்பங்களில் இவ்வாறான வீடுகள் தாக்கப்பட்டிருக்கின்றன.

புதிதாக குடியிருப்போர் அயலவருக்கும் ஆபத்தை ஏற்படுத்துவதையும் காணக் கூடியதாக உள்ளது.

இந்த நிலையில் எமது பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு காணி, வீடுகள் மற்றும் கட்டடங்களை அறிமுகம் இல்லாதவர்களுக்கு வாடகைக்கு வழங்குவதையோ விற்பனை செய்வதையோ தவிர்த்துக் கொள்ளுமாறுகேட்டுக் கொள்கின்றோம் என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கடந்த 21 ஆம் திகதி நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலால் பெருமளவானோர் கொல்லப்பட்டும் மேலும் பலர் காயமடைந்த நிலையிலும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அனைத்து மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், காயமடைந்தவர்கள் வெகு விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் எனவும் நாட்டில் ஏற்பட்டுள்ள குண்டுத் தாக்குதலை அடுத்து அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நாட்டில் அவசரகால நிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் மேலும் தாக்குதல் இடம்பெறலாம் என்ற அச்ச நிலை காணப்படுகின்றது.

இதனால் பாதுகாப்புப் படையினரும் பொலிஸாரும் நாட்டின் பல பாகங்களிலும் தீவிர பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (க)

## தேடப்படும் பட்டியலில் உள்ள வாகனத்துடன் இருவர் கைது

### 4 சாதனங்களும் மீட்கப்பட்டன

கொழும்பு, ஏப். 25

பொலிஸாரால் தேடப்படும் வாகனங்களில் ஒன்று, வரக்காபொலவில் மீட்கப்பட்டதோடு 4 தொலைத் தொடர்பு சாதனங்களும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வு அதிகாரிகள், சிறப்பு அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கிணங்க நேற்றுமுன்தினமிரவு அந்தப் பகுதியில் சுற்றிவளைப்பு நடத்தினர். இருவர் கைது செய்யப்பட்டனர். அவரிகளிடம் நடத்திய விசாரணைகளிலிருந்து வாகனம் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் 4 என்பன மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரினால் கைப்பற்றப்பட்ட குறித்த வாகனம் ஏற்கனவே சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் என்று தேடப்படும் பட்டியலில் உள்ள ஒன்று என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதான இரண்டு சந்தேக நபர்களுடன் தொடர்புகளைப் பேணினர் என்ற குற்றச்சாட்டில் மற்றொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர், படுகாயமடைந்தனர். (கு)



## வெறிச்சோடுகின்ற சுற்றுலாத் தலங்கள்

### குண்டுத் தாக்குதலின் எதிரொலி

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட தொடர் தற்கொலைத் தாக்குதலின் எதிரொலியால் பிரபல சுற்றுலா தலங்கள் அனைத்தும் வெறிச்சோடி காணப்படுகின்றன.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் காரணமாக 359 பேர் உயிரிழந்துள்ளனர். 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

தொடர் குண்டுவெடிப்பால், இலங்கையில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்கள் அனைத்தும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பொலிஸார் பல இடங்களிலும் தொடர்ந்து வெடிகுண்டுகளை கண்டுபிடித்து அதை செயலிழக்க செய்தும் வருகின்றனர். இந்தத் தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில் பாதுகாப்பு கருதி வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் பலரும் இலங்கைக்குச் சுற்றுலா வருவதற்குத் தயக்கம் காட்டுகின்றனர். இலங்கையில் உள்ள பிரபல நட்சத்திர விடுதிகளில் சுற்றுலா பயணிகள் செய்திருந்த முன்பதிவுகளை தற்போது இல்லாமல் செய்து வருகின்றனர். இலங்கையின் சுற்றுலாதுறை இதனால் கடுமையாகப் பாதிக்கபட்டுள்ளது. (ம.ஒ.5)

## பொலிஸாரால் வெடித்துச் சிதறிய உந்துருளி

### கொழும்பில் சம்பவம்

கொழும்பு, ஏப். 25

புறக்கோட்டை ஐந்துலாம்புச் சந்தியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளி குண்டு செயலிழக்கச் செய்யும் சிறப்பு அதிரடிப் படையினரால் வெடிக்கச்செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

சந்தேகத்துக்கு உரிய முறையில் உந்துருளி நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரிலேயே, உந்துருளி வெடிக்கச் செய்யப்பட்டுள்ளது. (ஒ.5)

## மன்னாரில் இயல்பு நிலை பாதிப்பு வர்த்தக நிலையங்களும் பூட்டு

மன்னார்,ஏப்.25

நாட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து மன்னாரின் இயல்பு நிலை நேற்று மூன்றாவது நாளாகவும் பாதிப்படைந்துள்ளதோடு, நேற்றைய தினம் மன்னாரில் துக்கம் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில்இடம்பெற்றகுண்டு வெடிப்பு சம்பவங்களை கண்டித்தும், உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் துக்கம் கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தகநிலையங்களும் மூடப்பட்டு, வர்த்தக நிலையங்களுக்கு முன் கறுப்புக் கொடி கட்டப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற அனைத்து கத்தோலிக்க ஆலயங்களுக்கும் முப்படையினரின் பாதுபாப்பு வழங்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் போக்குவரத்துக்கள் வழமை போல் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-56)

## புத்தாண்டு நிகழ்வுகள் பிற்போடப்பட்டன

கொடிகாமம்,ஏப். 25

சமுர்த்தி அபிவிருத்தி திணைக் களத்தால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி ஊடாக சமுர்த்தி பயனாளிகளுக்கு நடத்தவிருந்த புத்தாண்டு நிகழ்வுகள் மறு அறிவித்தல் வரை பிற்போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் நாடு பூராகவும் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெறவிருந்த புத்தாண்டு நிகழ்வுகள் அனைத்தும் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதம் காரணமாக உடனடியாக நிறுத்தப் பட்டன.

தென்மராட்சியில் சமுர்த்தி சமு தாய அடிப் படை வங்கி, வரணி சமுதாய அடிப்படை வங்கி ஆகியவற்றால் ஒழுங்கு படுத்தப் பட்ட விளையாட்டு போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றன.

மாலை நடைபெறவிருந்த கொடிகாமம் பிரதேச, கைதடி பிரதேச, சாவகச்சேரி பிரதேச சமுர்த்தி வங்கிகளின் புத்தாண்டு நிகழ்வுகள் நடைபெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஜ-159)

## யாழ்ப்பாணத்தில் துக்கதினம் மெழுகுவர்த்தியுடன் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணத்தில் அரச நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டு மெழுகுவர்த்திகள் ஏந்தி நேற்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

பல இடங்களில்வியாபாரநிறுவனங்கள், சந்தைகள் என்பன பூட்டப்பட்டிருந்தன. நாட்டின் பல இடங்களிலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இருந்தனர். துக்க தினமாக கடைப்பிடிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையிலேயே வர்த்தக நிலையங்களைப் பூட்டியும் கறுப்புகொடிகளை பறக்கவிட்டும் அஞ்சலி செலுத்தி துக்க தினத்தை கடைப்பிடித்தனர். (ம-க)



## பர்தாவுடன் சென்ற ஆணை முறையாகக் கவனித்த மக்கள்

கொழும்பு, ஏப். 25

வத்தளையில் பர்தா அணிந்தபடி சென்ற ஆணொருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டார். அதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவியது. பர்தா அணிந்தபடி ஒருவர் வத்தளை பகுதியில் சென்றுள்ளார். அவரது நடை மற்றும் நடவடிக்கையில் பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து அவரை சுற்றிவளைத்த மக்கள் சோதனை செய்ய முயற்சித்துள்ளனர். இதையடுத்து அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து நபரை பொலிஸ் நிலையம் அழைத்து சென்றனர். (ஒ.5)

## பர்தாவுக்கு தடை கோரிய எம்.பிக்கு நேற்று மிரட்டல்

கொழும்பு, ஏப். 25

பர்தா அணிவதை தடை செய்ய வேண்டும் என்று தனிநபர் தீர்மானத்தைக் கொண்டு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஆசு மாரசிங்கவுக்கு அலைபேசியில் எச்சரிக்கை விடுக்கப்பட்டு ள்ளதாகத் தெரியவருகிறது.



இரண்டு அலைபேசி அழைப்புகள் ஆசு மாரசிங்கவுக்கு கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. தனிப்பட்ட பாதுகாப்பு குறித்து கவனத்தில் கொள்ளுமாறு ஒரு அழைப்பிலும், ஆபத்தை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மற்றுமொரு அழைப்பிலும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் அமைப்பொன்றின் மூலம் முதல் அலைபேசி அழைப்பு கிடைத்துள்ளதுடன் மற்றைய அழைப்பு அதிகாரிகளிடம் இருந்து கிடைத்துள்ளது. (ஒ.5)

# அப்பாவி மக்கள்மீது நடத்தப்பட்டவை மிகவும் காட்டுத்தனத் தாக்குதல்களே!

## முஸ்லிம் சிவில் சமூகம் கண்டிப்பு

வவுனியா, ஏப். 25

அப்பாவி மக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குலாகும் என்று கண்டன அறிக்கை விடுத்துள்ளது வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம்.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

கடந்த 21ஆம் திகதி உலக கத்தோலிக்கர்களும், கிறிஸ்தவர்களும் தமது முக்கியமான உயிர்த்த ஞாயிறு திருநாளைக் கொண்டாடிய வேளை இலங்கையின் மட்டக்களப்பு சியோன் தேவாலயம், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம், கட்டுவப்பிட்டி செபஸ்தியார் ஆலயம் என்பவற்றிலும் பல நட்சத்திர ஹோட்டல்களிலும் மேற்கொள்ளப்பட்ட தொடர் குண்டுதாக்குதல்களுக்கு வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகமானது வன்மையாக தனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இந்தத் தாக்குதல்களால் 45 சிறுவர்கள் உட்பட 359க்கு மேற்பட்ட அப்பாவி மக்கள் கொல்லப்பட்டும் 500க்கும் மேற்பட்ட அப்பாவி மக்கள் காயமடைந்தும் உள்ளமையானது. இலங்கை நாட்டில் நடைபெற்ற மிகப்பெரிய மிலேச்சத்தனமானதும் மிகக்கொடூரமானதுமான பயங்கரவாதச் செயலாக வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் நோக்குகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு மக்களுக்காக ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் வெளிப்படுத்துகின்ற அதேவேளை பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் உறவினர்களினதும் துயரங்களிலும் துன்பங்களிலும் வடமாகாண முஸ்லிம்கள் பங்கேற்று அவர்களது ஆழ்ந்த கவலையினை பகிர்ந்து கொள்கின்றனர்.

சகல மதங்களும் வன்முறைகளை தவிர்த்து வாழ்வதையே முக்கியப்படுத்துகின்றது குறிப்பாக இஸ்லாத்தில் வன்முறைகளுக்கும் பயங்கர வாதத்துக்கும் இடமே இல்லை என்ற நிலைப்பாடு சகலருக்கும் புரிய வேண்டும்.

ஆகவே இந்த மனிதாபிமானமற்ற காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாத செயலை மேற்கொண்டு இலங்கைத் திருநாட்டில் ஒற்றுமையைச் சீர்குலைக்க எந்த மிருகத்தகமானவர்கள் முயற்சித்தார்களோ அவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனவும் இவ்வாறு வழங்கப்படுகின்ற தண்டனையானது இது போன்ற ஈனச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஒருபாடமாக அமைய வேண்டும் எனவும் வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் வேண்டுகின்றது.

மனிதாபிமானமற்ற தாக்குதல்களை மேற்கொண்ட ஒரு சில வங்கறோத்துக்காரர்களின் நடவடிக்கையால் இலங்கை நாட்டில் வேறு எந்த அப்பாவி மக்களும் பாதிக்கப் படக்கூடாது என்பதுடன் இம்மிலேச்சசெயலை பாவித்து சமூகங்களிடையே பிரிவு, சந்தேககங்கள் மற்றும் குரோத மனப்பாங்கு என்பவை ஏற்பட்டு விடாதிருக்க தேவையான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் சகல சமூகத்தவர்களும் செய்யவேண்டும் எனவும் வடமாகாண முஸ்லிம் சிவில் சமூகம் எதிர்பார்ப்பதோடு தனது பங்களிப்புகளையும் செய்ய முன்வந்துள்ளது.

இவ்வாறான பாதிப்புக்களில் இருந்து அப்பாவி மக்களைப் பாதுகாக்க இலங்கை அரசும், பாதுகாப்புத் துறையினரும், சமயக் கட்டமைப்புக்களும், சிவில் சமூக அமைப்புக்களும், பன்னாட்டுச் சமூகமும், ஐக்கிய நாடுகள் அமைப்புக்களும் முயற்சிக்க வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட சகலரையும் தயவுடனும் அன்புடனும் கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ம-110)

# கொலைகளைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

## சீமானின் தலைமையில் நாளை

யாழ்ப்பாணம், ஏப். 25

இலங்கையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களைக் கண்டித்து சென்னையில் நாளை வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

நாம் தமிழ் கட்சியின் சீமான் தலைமையில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பிற்பகல் 3 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 350க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கையைவிட அதிகளவில் படுகாயமடைந்துள்ளனர். (மத)

# அரசியல் வாதிகள் அனுசரணையின்றி இந்த அவலத்துக்கு சாத்தியமேயில்லை

## விசாரணை அவசியம் என்கின்றார் சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி



யாழ்ப்பாணம், ஏப். 25

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவின்போது நாடெங்கும் ஏற்பட்ட பேரவலம் அரசியல் வாதிகளின் ஆசீர்வாதமின்றிச் சாத்தியமில்லாதது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாள்ஸ் நிர்மலநாதன்.

நாட்டில் ஏற்பட்ட பேரவலம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தின் எல்லையோரம் வில்பத்துக் காட்டுக்குள் இயங்கிய இரகசிய பயிற்சி முகாம் தொடர்பில் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் அங்கே கைது செய்யப்பட்ட ஆயுதம் தாங்கியோரை பொலிஸாருடன் தொடர்பு கொண்டு ஓர் அரசியல்வாதி விடுவித்தார். இதற்கு என்ன நடவடிக்கை? இந்த நாட்டின் தற்போதைய அமைச்சர் ஒருவர் மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயரை பயங்கரவாதி என்றார். இன்று கத்தோலிக்க ஆலயங்களில் குண்டு வெடித்துள்ளது. இதேநேரம் இங்கே செயல்படும் முஸ்லீம் பயங்கரவாத அமைப்புகள் அரசியல் வாதிகளின் அனுசரனையின்றி எவற்றையும் செய்யமுடியாது. இது அரசதலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோருக்கும் தெரியும். ஆனால் அந்த அமைச்சரை விசாரித்தால் தனது ஆட்சி இல்லாது போய்விடும் என தலைமை அமைச்சர் அஞ்சுகின்றார்.

இதேநேரம் இதனோடு தொடர்புபட்ட ஆளுநர்களை விசாரித்தால் தனக்கு அடுத்த தேர்தலில் முஸ்லிம் வாக்கு கிடையாது என அரசதலைவர் பயப்படுகின்றார். இத்தகைய தலைவர்களை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்ய முடியும் - என்றார்.

(ம-105)

### தெல்லிப்பழை மருத்துவமனையின்

# புற்றுநோய் பிரிவுக்கு இராணுவ பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஏப். 24

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் புற்றுநோய் பிரிவின் கதிர் வீச்சு சிகிச்சைப் பிரிவுக்கு இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கதிர் வீச்சு சிகிச்சை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனையாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை உள்ளது. கதிர்வீச்சு சிகிச்சையை பெறுவதற்கு அதிகளவான நோயாளர்கள் இங்கு வந்து செல்கிறார்கள். புற்றுநோய் கதிர் வீச்சுப் பகுதியானது மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய ஒன்று. நாட்டில் அண்மையில் பல்வேறு குண்டுவெடிப்பு சம்பவங்கள் இடம்பெற்று பலர் கொல்லப்பட்டுள்ளனர். அசம்பாவிதம் ஏற்பட்டால் பாதிப்பும் மிகமிக அதிகமாகக் காணப்படும்.

எனவே குறித்த கதிர்வீச்சுப் பகுதிக்கு பாதுகாப்பை வழங்குமாறு யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட இராணுவ கட்டளை தளபதி ஆகியோருக்கு மருத்துவமனை அத்தியட்சகரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அதற்கு அமைவாக பாதுகாப்புப் பிரிவினர் அந்தப் பகுதியை நேரில் சென்று பார்வையிட்டு அந்த இடத்துக்கு பலத்த இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

போருக்கு முன்னரான காலப் பகுதியில் புற்றுநோய் பிரிவின் கதிர் இயக்க பகுதி முழுமையாக இராணுவத்தின் கண்காணிப்பில் இருந்து வந்துள்ளது. அங்கு மறைகாணிகள் பொருத்தப்பட்டு அவை இராணுவ தலைமையகத்தில் இருந்து கண்காணிக்கப்பட்டது. போர் நிறைவுக்கு வந்த பின்னர் இராணுவ பாதுகாப்பு தளர்த்தப்பட்டு மருத்துவ மனை நிர்வாகம் அதனைக் கண்காணித்து வந்தது. கதிர் இயக்க பகுதியில் உள்ள இயந்திரங்களை திருத்தம் செய்தல் மற்றும் புதிய இயந்திரங்களை பொருத்தும் நடவடிக்கைகளில் பாதுகாப்பு அமைச்சின் பாதுகாப்பு பிரிவின் உதவியுடன் மட்டுமே அவை மருத்துவ மனைக்கு எடுத்து வரப்படும் நடைமுறை தற்போதும் காணப்படுகிறது. அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பகுதிக்கு நேற்று முன்தினம் முதல் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-7,105)

# அரச தலைவர் இன்று அனைத்துக் கட்சிகள் மாநாட்டுக்கு அழைப்பு

கொழும்பு, ஏப். 25

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்கு இன்று அனைத்துக் கட்சிகள் மாநாட்டினைக் கூட்டுவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

அரச தலைவர் செயலகத்தில் இன்று காலை 10 மணிக்கு இந்த மாநாடு நடைபெறவுள்ளது. அனைத்துச் சமய கூட்டமொன்றும் அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவின் தலைமையில் இன்று பிற்பகல் 4 மணிக்கு அரச தலைவர் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. (ம)

# தொடர்கிறது ஊரடங்கு

கொழும்பு, ஏப். 25

நாட்டில் ஏற்பட்ட தொடர் குண்டுவெடிப்புக்களைத் தொடர்ந்து, பல பிரதேசங்களிலும் சந்தேகத்து இடமான பொதிகள், குண்டுகள் என்பன மீட்கப்படும் நிலையிலும், இராணுவத்தினரின் சுற்றி வளைப்பு மற்றும் சோதனைகள் தொடங்கியுள்ள நிலையிலும், ஊரடங்குச் சட்டம் நான்காவது நாளாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்று இரவு 10 மணியிலிருந்து இன்று அதிகாலை 4 மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தது. (ஒ.5)

### குண்டுத்தாக்குதல் எதிரொலி

# பாதுகாப்புச் செயலர், ஐ.ஜி. பதவிவிலக அறிவுறுத்தல்!

## மகிந்த காலத்து ராணுவத் தளபதியை புதிய செயலராக நியமிக்க ஆலோசனை

கொழும்பு, ஏப். 25

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இராணுவத் தளபதியாக பணியாற்றிய ஜெனரல் தயா ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலராக நியமிக்கப்பட வுள்ள தாக, கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

தற்போதைய பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரை பதவி விலகுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியுள்ளார். நாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தொடர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் காரணமாக 359 பேர் உயிரிழந்துள்ளனர். தாக்குதல் தொடர்பான முன்னெச் சரிக்கை தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்கத் தவறியமை காரணமாகவே இந்தப் பெரும் உயிரிழப்பு ஏற்பட்டதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. இந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலர், பொலிஸ்மா அதிபர் ஆகியோரை பதவி விலகுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று அறிவுறுத்தியுள்ளதாகத் தெரியவருகின்றது.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலராக, மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையில் இராணுவத் தளபதியாக பணியாற்றிய ஜெனரல் தயா ரத்னாயக்கவை நியமிக்க ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

(ம-ஒ.5)

### குண்டுத் தாக்குதலுடன் தொடர்பென

# கைதான வர்த்தகர் இப்ராஹிமுக்கும் மகிந்த ராஜபக்சவுக்கும் தொடர்புண்டு

## விசாரணைகளில் பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

தற்கொலைத் தாக்குதல் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள செல்வந்த வர்த்தகருக்கும் கடந்த ஒக்ரோபரில் அரசியல் புரட்சி செய்து தலைமை அமைச்சராகச் சதி செய்தவரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்சவுக்கும் தொடர்பிருக்கின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வர்த்தகரான 65 வயதான அல் ஹாஜ் யூசுப் மொஹமட் இப்ராஹிம் என்பவர் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர். அவர் மகிந்த ராஜபக்சவுடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டவர் என்பதும் விசாரணைகளில் அம்பலமாகியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த தாக்குதல் சம்பவங்களையடுத்து கைது வேட்டை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

மொஹமட் இப்ராஹிம், கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப்பட்டியலில் இடம்பெற்றிருந்ததாக கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். அத்துடன் மொஹமட் இப்ராஹிம், அமைச்சர் றிசார்ட் பதியூதீனுடன் காணப்படும் புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டிருந்தது. அந்த ஒளிப்படம் 8 வருடங்களுக்கு முன்னர் நடந்த வர்த்தகர்களுடனான சந்திப்பில் எடுக்கப்பட்டது என்பது விசாரணைகளில் தெரியவருகிறது.

**வர்த்தகரின் ஒருமகன் தலைமறைவு**

வர்த்தகரான மொஹமட் இப்ராஹிமின் இளைய புதல்வரான இஸ்மையில் அஹமட் இப்ராஹிம் தலைமறைவாகியுள்ளார் என்று பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மற்றைய இரு மகன்கள் தற்கொலைத் தாக்குதல்**

கிங்ஸ்பெரி மற்றும் சினமன் கிரேன்ட் ஆகிய ஹொட்டல்களில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தியோர், இப்ராஹிமின் இரண்டு மகன்களான இம்சான் அஹமட் இப்ராஹிம் மற்றும் இல்ஹாம் அஹமட் இப்ராஹிம் ஆகியோர் என்று தெரியவந்துள்ளது.

**நான்காவது மகன் கைது**

மொஹமட் இப்ராஹிமின் மற்றுமொரு மகனான இஜாஸ் அஹமட் இப்ராஹிம் என்பவரைக் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர். தெமட்டகொட மஹவில வீதியில் உள்ள ஆடம்பர இரண்டு மாடி வீட்டைச் சோதனையிட்ட போது இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

**குண்டுவெடிப்பு**

இந்த வீடு மொஹமட் இப்ராஹிமுக்குச் சொந்தமானது என்று கிடைத்த புலனாய்வுத் தகவலையடுத்து, பாதுகாப்புத் தரப்பினர் வீட்டைச் சோதனையிட்டபோது குண்டு வெடித்தது. அதில் மூன்று பொலிஸார் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து அதிரடிப்படையினர் வீட்டின் இரண்டாவது மாடியில் ஏறிச் சோதனையிட்ட போது, மற்றொரு குண்டு வெடித்தது. இந்தச் சம்பவத்தில் வீட்டில் இருந்த பாத்திமா ஜிப்ரி மற்றும் இரண்டு பிள்ளைகள் கொல்லப்பட்டனர். வீட்டின் கீழ் மாடியில் இருந்து ரிமோர்ட் கொன்றோல் மூலம் குண்டு வெடிக்க வைக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்புத் தரப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். விசாரணை தொடர்கிறது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த)



## உந்துருளி இருக்கையை வெடிக்க வைத்த பொலிஸ்

### வெள்ளவத்தையில் சம்பவம்

கொழும்பு, ஏப். 25

வெள்ளவத்தை, சவோய் திரையரங்குக்கு அருகில் சந்தேகித்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உந்துருளியைச் சோதனையிடுவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். பாதுகாப்புப் பிரிவினர், உந்துருளியின் இருக்கையை வெடிக்கச்செய்து, அதனைத் திறப்பதற்கு முற்பட்டுள்ளனர். இதன்போது எவருக்கும் காயம் ஏற்படவில்லை. உந்துருளியிலிருந்தும் வெடிபொருள்கள் மீட்கப்படவில்லை. (ஒ,5)

## அரச, தனியார் நிறுவனங்கள் சிலவற்றில் பர்தாவுக்குத் தடை

யாழ்ப்பாணம், ஏப். 25

நாட்டில் ஏற்பட்ட இடர் காரணமாக கொழும்பில் அரச திணைக்களங்களுக்குச் செல்லும் முஸ்லிம் பெண்கள் பர்தா அணிந்து செல்வது தொடர்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளதோடு, பல இடங்களில் பர்தா அணிவதற்குத் தடை விதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. வடக்கில், பர்தா அணிந்து அலுவலகங்களுக்கு வருபவர்களை, பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு தடுத்து நிறுத்தட்டுமா என்று அலுவலர்கள் மேலதிகாரிகளை கேட்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

**தனியார்**

பல தனியார் நிறுவனங்களிலும் பர்தா அணியத் தடை என்று குறிப்பிடும் அறிவித்தல் தொங்கவிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நடைமுறையை ஏனைய திணைக்களங்களும் நடைமுறைப் படுத்துவது தொடர்பில் ஆராய்கின்றனர். தடை விதிப்பது தொடர்பில் இரு வேறுபட்ட கருத்து நிலவினாலும் பல இடங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதனால் பர்தா விடயத்தில் சர்ச்சை நீடிப்பதோடு பாதுகாப்பே முக்கியம் என்ற நிலமை வலுப்பெறுகின்றது என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (த-105)

## இலங்கை, இந்தியா, மாலைதீவில் நிலைகொள்ளவே ஐ.எஸ். திட்டம்

### பயங்கரவாத எதிர்ப்பு நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

ஐ.எஸ் தீவிரவாத இயக்கம் இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் நிலைகொள்ளத் தொடங்கியுள்ளதாக பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான நிபுணரும், சிங்கப்பூர் பல்கலைக்கழக பேராசிரியருமான ரொஹான் குணரட்ண தெரிவித்துள்ளார்.

சிரியா மற்றும் ஈராக்கிலிருந்து ஒடுக்கப்பட்டு வரும் ஐ.எஸ் தீவிரவாதிகள் உலகின் வேறும் நாடுகளில் கிளைகளை நிறுவி இயங்கத் தொடங்கியுள்ளனர் என்று அவர் தெரிவித்துள்ளார். இலங்கையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்கள் மற்றும் ஹொட்டல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களுடன் ஐ.எஸ் தீவிரவாதிகளுக்குத் தொடர்பு உண்டு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள இயக்கமொன்றுடன் இணைந்து ஐ.எஸ் தீவிரவாதிகள் இந்தத் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைவரையும் கடும் போக்குவாதத்துக்குள் மூழ்கடிக்கச் செய்து தாக்குதல்களை நடத்த வேண்டிய அவசியமில்லை. குறிப்பிட்ட சில அடிப்படைவாதிகளைக் கொண்டு ஐ.எஸ் தீவிர வாதிகளால் தாக்குதல்களை நடத்த முடியும். ஐ.எஸ் தீவிரவாதிகளின் தாக்குதல் கட்டமைப்புக்குள் அனைவரும் அடிப்படைவாதிகளாக இருக்க வேண்டிய அவசியப்பாடு கிடையாது.

**வெளிநாட்டவரே இலக்கு**

இலங்கையில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இதற்கு முன்னர் எவ்வித முரண்பாட்டு நிலைமைகளும் உருவாகியதில்லை. சில சந்தர்ப்பங்களில் முஸ்லிம்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் முரண்பாட்டு நிலைமைகள் காணப்பட்டிருந்தன. உள்நாட்டுப் பிரச்சினையாக இருந்திருந்தால் பௌத்த விகாரைகள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். மேற்குலக நாட்டவரை இலக்கு வைத்தே இவ்வாறு ஹொட்டல்கள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன என்று அவர் தெரிவீத்துள்ளார். (த)

## சிவில் பாதுகாப்புக்களை துரிதமாகச் செயற்படுத்தவும்

### அரச தலைவரின் செயலர் அறிக்கை

கொழும்பு, ஏப். 25

நாடு முழுவதும் நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களை செயற்படுத்துமாறு அறிவித்து, அரசதலைவர் செயலர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார். தற்போது நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு குழுக்களை உடனடியாக செயற்படுத்துமாறு மாவட்டச் செயலர்கள் மற்றும் பிரதேச செயலர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக உள்ளக, உள்நாட்டலுவல்கள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளில் உருவாக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புக் குழுக்களை செயற்படுத்தி அவர்களின் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

## சுற்றிவளைப்புக்களில் இராணுவம் ஈடுபடும்

### மகேஸ் சேனநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

பயங்கரவாதத் தாக்குதல்களில் ஈடுபட்ட சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக நேற்று முதல் புதிய சுற்றிவளைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஸ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சந்தேகநபர்கள், வாகனங்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பில் தெரியப்படுத்துவதற்காக இராணுவ தலைமையகத்தினால் தொலைபேசி இலக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 0112 43 42 51, 0114 05 51 05, 0114 05 51 06, 0766 91 16 04, 0112 43 33 35 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்புகொண்டு அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

## உலமா சபையினரும் ஆயரும் சந்திப்பு

மன்னார் மாவட்ட ஜமியத்துல் உலமா சபையினருக்கும், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகைக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த சந்திப்பு நடைபெற்றது.

மன்னார் மாவட்ட ஜமியத் உலமா அமைப்பினருடன், மூத்தசட்டத்தரணி எம்.சபுர்தீன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி ஹீனைஸ் பாறுக், மன்னார் மூர்வீதி மற்றும் உப்புக்குளம் பெரிய பள்ளிவாசல்களின் மௌலவிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் இணைந்திருந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டில் இடம் பெற்ற துக்ககரமான சம்பவத்துக்கு அனுதாபத்தையும் கண்டனத்தையும் மன்னார் ஜமித்துல் உலமா அமைப்பினர் ஆயரிடம் தெரிவித்தனர். மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் மற்றும் கத்தோலிக்கமக்களுக்கு இடையிலான உறவு இத்தகைய துன்பகரமான செயலால் சீர்கெட்டு விடக்கூடாது. நல்லுறவை ஏற்படுத்தும் முக்மாக பள்ளிவாசல்கள், ஆலயங்களில் சமய சொற்பொழிவுகள் இடம்பெற வேண்டும் என்று ஜமித்துல் உலமா அமைப்பினர் கூறியுள்ளனர். (த-56)



# மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் முப்படையினரின் பாதுகாப்புடன் சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுப்பு

மன்னார்,ஏப்.25

நாட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிர் நீத்த வர்களுக்காகவும், நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்பதற்காகவும், மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று புதன் கிழமை காலை 10 மணியளவில் சிறப்புத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளது.





திருப்பலியில் மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கலந்து கொண்டு திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

உயிரிழந்தவர்களின் ஆன்மா சாந்தியடையவும், காயப்பட்டவர்கள் குணமடையவும் திருப்பலி சிறப்பு விதமாக ஒப்புக்கொண்டுக்கப்பட்டது.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் குறித்த திருப்பலி இடம் பெற்ற போது பொலிஸார்,இராணுவத்தினர் மற்றும் கடற்படையினர் சிறப்பு பாதுகாப்பை வழங்கி இருந்தனர்.

இதன் போது திருப்பலி நேரத்தில் ஆலயத்துக்குள் செல்ல மகக்ளுக்கு படையினர் அனுமதியைமறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-56,60)



## புளியம்பொக்கணையில் பழைய ஆர்.பி.ஜிகள் மீட்பு

கிளிநொச்சி,ஏப்.25

கிளிநொச்சி புளியம்பொக்கணைப் பகுதியில் 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய ஆர்.பி.ஜி வகை செல் குண்டுகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் வெடி பொருள்கள் உள்ளதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய சம்பவஇடத்துக்குவிரைந்த சிறப்பு அதிரடிப்படையினர் ஆர்.பி.ஜி .செல்களை மீட்டுள்ளனர். (க-214)



## சவாரித்திடல் சீரமைப்பு

முல்லைத்தீவு.ஏப்.25

பன்னங்கண்டி மாட்டு வண்டில் சவாரித்திடல் கடந்த 20 ஆம் திகதி சீரமைக்கப்பட்டுள்ளது.

வைகாசி மாதம் நடைபெறவுள்ள பாரம்பரிய விளையாட்டான மாட்டு வண்டில் சவாரிப்போட்டிக்காக நீண்டகாலம் கவனிப்பாரற்றுக்கிடந்த பன்னங்கண்டிசவாரித்திடல் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பிரதேச சபை உறுப்பினர் சத்தியானந்தனின் நெறிப்படுத்தலில்அண்மையில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்றன. (க-222)

## ‘தங்கச்சிக்கு காயம் இல்லை அவ எழும்பிவருவாதானே?’

### 5 வயது தங்கைக்காக 10 வயது அண்ணனின் பாசப்போராட்டம்

கொழும்பு, ஏப். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நாட்டையே உலுக்கிப் போட்டுள்ளது. சிறுவர்களும், குழந்தைகளும் இந்தத் தாக்குதலில் உயிரிழந்ததுடன் காயமடைந்து சிகிச்சை பெற்றும் வருகின்றனர்.

சம்பவதினத்தன்று வத்தளையைச் சேர்ந்த தமிழ்க் குடும்பமும், கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயத்துக்கு பூசைக்குச் சென்றது. 5 வயதுச் சிறுமி, அவளது 10 வயது சகோதரன், தந்தையார் மற்றும் பேர்த்தியார் ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது தற்கொலை குண்டுதாரி குண்டை வெடிக்க வைத்துள்ளான்.

சிறுமி தூக்கி வீசப்பட்டாள். அவளது அண்ணன், ஓடிச் சென்று தங்கையைத் தூக்கினான். அவள் உடம்பில் காயங்கள் இருக்கவில்லை. காதால் குருதி வழிந்து கொண்டிருந்துள்ளது. தந்தையின் உதவியுடன் நோயாளர் காவு வண்டி மூலம் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டாள் சிறுமி. அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறாள். அவள் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறாள் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த அண்ணன், தனது தங்கையை நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்டுள்ளான். தங்கையின் உடலில் காயங்கள் இல்லாததால், அவள் விரைவில் குணம்டைந்து வருவாள் என்று மருத்துவர்களிடம் கூறியுள்ளான். சிறுமி ஆபத்தான கட்டத்தில் இருப்பது தெரியாமல், பத்து வயது அண்ணன், தங்கைக்காகக் காத்திருக்கின்றான். (ஒ,5)

## குண்டுத் தாக்குதலில் 45 சிறுவர்கள் சாவு

### யுனிசெப் அறிக்கை

கொழும்பு. ஏப். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்களில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் போது 45 சிறுவர்கள் கொல்லப்பட்டமை மிகுந்த வேதனையளிப்பதாக ஐக்கிய நாடுகளின் யுனிசெப் அமைப்பு கவலை வெளியிட்டுள்ளது.

பல சிறுவர்கள் அதிர்ச்சியூட்டும் மற்றும் அறிவின்றி மேற்கொள்ளப்பட்ட வன்முறைக்கு சாட்சியாகியுள்ளனர் என்றும் யுனிசெப் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

குண்டு வெடிப்பில் பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பராமரிக்கத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க யுனிசெப் நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர்களுக்கு உளவியல் சமூக ஆதரவு பிரதான தேவை என்று இனங்காணப்பட்டுள்ளது. சம்பவங்களில் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தேவையான உளவியல் சமூக முதலுதவியை யுனிசெப்வழங்கிவருதாகவும்கூறப்பட்டுள்ளது. (ஒ.5)

# அவன் மட்டும்தான் அவளின் உலகம்; இனி என்ன சொல்லித் தேற்றுவேன் ?

### கதறும் தந்தை

கொழும்பு, ஏப். 25

அமெரிக்காவைச் சேர்ந்த கிரண் என்ற 11 வயதுச் சிறுவன், இலங்கையில் விடுமுறையைக் கழிக்க வந்தபோது தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சிக்கி உயிரிழந்துள்ளான்.

தனது விடுமுறையைச் சிறப்பாக கழிக்க தாயுடன் இலங்கை வந்துள்ளான். சம்பவம் இடம்பெற்ற அன்று காலை கொழும்பில் உள்ள சின்னமன் கிராண்ட் ஹோட்டலில் உணவருந்த அவனும் அவனது தாயும் சென்ற போது அங்கு குண்டு வெடித்துள்ளது. சிறுவன் கிரண் மட்டும் உயிரிழந்துள்ளான். அவனது தாய் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சிறுவனின் இறப்பு குறித்த ஆதங்கத்தை அவனது தந்தை அலெக்ஸ் ஆரோ ஆங்கில ஊடகத்துக்குத் தெரிவித்துள்ளார். ‘கிரண் எங்களுக்கு ஒரே பிள்ளை. மிகவும் புத்திசாலி. தன் விடுமுறையை இன்பமாகக் கழிக்க அவன் இலங்கை சென்றான். இலங்கையிலிருந்து அவன் திரும்பி வந்திருந்தால் கிரண் ஏழாம் வகுப்புக்குச் சென்றிருப்பான். அவனுக்கு தான் ஒரு நரம்பியல் நிபுணராக வேண்டும் என்பதுதான் ஆசை. அவன் யாரையும் நம்பி இருக்கமாட்டான். தன் சுய முயற்சியின் மூலமே அனைத்துச் செயல்களையும் செய்து முடிப்பான்.



கிரணுக்கு அனைத்து நாடுகளுக்கும் செல்ல வேண்டும் என்று ஆசை. இதுவரை ஐந்து நாடுகளுக்குச் சென்றுவந்துள்ளான். அவனுக்கு சைனீஸ், சிங்களம், மண்டாரின் (சீனாவில் பேசும் வேறும் ஒரு மொழி) ஆகிய மூன்று மொழிகள் தெரியும். கராத்தே கலையில் தேர்ந்தவர். அவனுக்கு கயாக்கும் (ஒரு வகை படகு சவாரி) தெரியும். அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட பின்னர் வானூர்தியில் இருக்கும் போது கிரணும் அவனது தாயும் என்னிடம் அலைபேசியில் பேசினர். அப்போது தான் இலங்கை சென்று மீண்டும் அமெரிக்கா வந்தவுடன் கயாக்கில் செல்ல வேண்டும் என்று கிரண் என்னிடம் கூறினான்.

கிரணின் தாய்க்கு அவனைத் தவிர வேறு எதுவுமே தெரியாது. அவன்தான் அவளின் உலகம். பிள்ளைக்காக தன் வாழ்வையும் அவள் அர்ப்பணித்திருந்தாள். அவனின் ஆசைகளை நிறைவேற்ற அவள் எதுவும் செய்ய தயாராக இருந்தாள். இப்போது கிரண் இல்லை, என் மனைவியை நான் எவ்வாறு தேற்றுவேன் எனத் தெரியவில்லை. தீவிரவாதிகளுக்குத் தாங்கள் யாரை கொல்கிறோம் என்று தெரியவில்லை. ஆனால் நாம் அதை தெரிந்துகொள்ள வேண்டும். தீவிரவாதிகள் மனதில் என்ன நினைத்துள்ளார்கள் எனத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் ஒரு நொடியில் என் மொத்த வாழ்வையும் என்னிடமிருந்து பறித்து விட்டார்கள். தாங்கள் என்ன செய்கிறோம் எனத் தெரியாமலேயே அவர்கள் இது போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள், எனக் கூறிக் கதறி அழுதார். (ஒ,5)

# இந்தியா முன்னெச்சரித்தும் தடுக்கத் தவறிவிட்டோம்

## ரணில் கூறியதாக இந்திய தொலைக்காட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

இந்திய உளவுத்துறை வெடிகுண்டு தாக்குதல் தொடர்பாக தகவல்களை வழங்கியது. ஆனால் நாங்கள் அதுபற்றிக் கவனம் இல்லாமல் இருந்து விட்டோம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். இந்தியாவின் என்.டி.டி.வி.க்கு வழங்கிய நேர்காணலிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தியா எங்களுக்கு சில உளவுத்துறை தகவல்களை அளித்தது. ஆனால் நாங்களே சற்றுக் கவனம் இல்லாமல் இருந்துவிட்டோம். சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உளவுத்துறையுடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம்.

வெளிநாட்டு சதி ஏதேனும் உள்ளதா என்பது குறித்து வெளிநாட்டு நிறுவனங்களிடம் நாங்கள் உதவி கேட்டுள்ளோம். கடந்த மாதம் நியூஸிலாந்தில் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதற்குப் பதிலடியாக இலங்கையில் தேவாலயங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்று கருதுகிறோம்.

தொடர் குண்டுவெடிப்பால் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டிருந்தாலும் இதிலிருந்து இலங்கை மீண்டு வரும். இதே போன்று எகிப்து, பாலியிலும் குண்டுவெடிப்பு சம்பவங்கள் நடந்திருக்கின்றன.



அந்த நாடுகள் வெகு விரைவில் பழைய நிலைக்குத் திரும்பின. இருந்தாலும் எங்கள் நாட்டின் பொருளாதாரத்துக்குச் சிக்கலான விடயமே இங்கு நடந்திருக்கிறது. இதுபோன்ற பல தீவிரவாத தாக்குதல்களையும் போர்களையும் நாங்கள் பார்த்து விட்டோம் - என்றார். (ஒ.5)

## நாட்டின் இன சகோதரத்துவத்தை சீரழித்துவிட இடமளிக்கக் கூடாது

யாழ்ப்பாணம், ஏப். 25

பன்னாட்டு பயங்கரவாதம் இலங்கையை தேர்ந்து எடுத்தமை அதிர்ச்சி தருகிறது. நமது நாட்டின் இன சகோதரத்துவத்தை சீரழித்துவிட இடமளிக்க கூடாது என தமிழ் தேசிய பணிக்குழுவின் தலைவர் கலாநிதி குமரகுரு பரன் தெரிவித்துள்ளரர். பதவி விலக வேண்டும், மிலேச்சத்தனம், கண்டிக்கின்றோம், வன்மையாக கண்டிக்கின்றோம், தண்டிப்போம் எனும் அரசியல் அறிக்கைகளுக்கு அப்பால், எம்முள் நாம் அரசியலில் ஒருவரை ஒருவர் தாக்கி கொள்வதற்கான தருணமாக நான் இதைக் கருதவில்லை.

இது ஒரு தனிப்பயங்கரவாத நிகழ்வல்ல. மாறாக பன்னாட்டு ரீதியான, பாரிய பரவலான தனிக் குறிக்கோளற்ற பன்னாட்டு பயங்கரவாதத்துக்கே நம் தேசம் இலாக்காகியுள்ளது எனவும் தமிழ் தேசிய பணி குழுவின் தலைவரும், மேல் மாகாணசபை முன்னாள் உறுப்பினருமான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

போர்க் காலத்தின் பின் இலங்கையில் மீண்டும் வளர்சி பெற்ற உல்லாசப்பிரயாணத்துறை பெரும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. பன்னாட்டு ரீதியான பயங்கரவாதமாயினும், இந்தப் பயங்கரவாதம் நமது சிறிய தேசமான இலங்கையை தேர்ந்து எடுத்தமை அதிர்ச்சி அளிக்கிறது.

இது பல்லினமும் பல் மதமும், புத்தமும் இந்துவும், கிறிஸ்தவமும் இஸ்லாமும் இன்புற்று பின்னிப் பிணைந்து புரிந்துணர்வோடு வாழும் நாடு. பன்னாட்டு பயங்கரவாதம் நம் நாட்டின் இன சகோதரத்துவத்தை சீரழித்துவிட இடமளிக்ககூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம,க)

## குடும்ப தலைவர் சடலமாக மீட்பு

சாவகச்சேரி,ஏப்.25

தவறான முடிவெடுத்து குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச்சம்பவம் நுணாவில் மேற்கு விளைவேலி மருதடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த பருத்தித்துறையில் நகைக்கடை உரிமையாளரான சிவசுப்பிரமணியம் தேவதாசன் ( வயது- 46 ) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தங்க நகை உற்பத்திக்குப் பயன்படுத்தும் பொட்டாசியத்தை அருந்திய நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இதன்போது பரிசோதனை செய்த மருத்துவர் ஏற்கனவே இவர் சாவடைந்துள்ளார் எனத் தெரிவித்தார் என கூறப்பட்டது.

இவரது சடலம் சாவகச்சேரி மருத்துவமனை சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதிகரித்த கடன் சுமை காரணமாக தவறான முடிவு எடுத்து உயிரிழந்திருக்கலாம் என உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.(ஐ-9)

## பழைய இரும்புகள் சேகரிப்போரின் வியாபாரம் தற்காலிக நிறுத்தம்

வலி.தென்மேற்கு, ஏப். 25

குடாநாட்டில் பழைய இரும்புகள், பிளாஸ்ரிக் பொருள்களைச் சேகரித்து வந்தவர்கள் தமது வியாபாரத்தை நிறுத்தியுள்ளனர். மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களைத் தொடர்ந்து, அவர்கள் இவற்றை நிறுத்தியுள்ளனர். முதன்மை வீதிகள், சந்திகள் மற்றும் சந்தைகளிலிருந்து வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அங்காடி வியாபாரிகளும் தங்கள் தொழிலைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளனர். இதுவரை அவர்கள் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் சென்று பழைய இரும்பு, பிளாஸ்ரிக் போன்ற பொருள்களைச் சேகரித்து வந்தனர். (த-115)

## பாடசாலை முன் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஏப். 25

அநுராதபுரம் - ரம்பேவ - கோனேவவில் பாடசாலை ஒன்றின் முன்பாகவுள்ள கைக்குண்டொன்று மீட்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுற்றிவளைப்பு நடத்தியபோது அதை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். வெடிகுண்டு செயலிழக்க செய்யும் பிரிவினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## அவசரகாலச் சட்டம் நிறைவேறியது

கொழும்பு, ஏப். 25

நாடாளுமன்றில் நேற்று விவாதத்துக்கு எடுக்கப்பட்ட அவசரகாலச் சட்ட ஏற்பாடு வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமையை அடிப்படையாக வைத்து அரச தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தின் சரத்துக்கள் தொடர்பான விடயம் நாடாளுமன்றத்தில் நேற்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விவாதம் நேற்று காலை 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை இடம்பெற்றது.



அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் விவாதத்தில் பங்கேற்று உரையாற்றினர். இறுதியில் அவசரகாலச் சட்டத்துக்கு வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றால் ஏகமனதாக ஒப்புதல் விழங்கப்பட்டது. (ஒ.5)

## போட்டியிட்டவரேயன்றி கட்சி உறுப்பினர் அல்லர்

### கைதானவர் பற்றி ஜே.பி.வி. தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

தற்கொலைக் குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கொழும்பு தெமட்டக்கொடயில் கைதுசெய்யப்பட்டவர் 2015ஆம் ஆண்டில் பொதுத்தேர்தலில் மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியலைப் பிரதிநிதித்துவம் செய்தார் என்று கூறப்படுகிறது. அந்தப் பரப்புரைகள் தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலர் எம்.ரில்வின் சில்வா ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இதுதவிர, ஒருசில வங்குரோத்தடைந்த அரசியல் குழுக்கள் 'குழம்பிய குட்டையில் மீன் பிடித்தல்' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் தெமட்டக்கொடயில் கைது செய்யப்பட்டார். அவர் 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் எமது கட்சியின் தேசியப் பட்டியலைப் பிரதிநிதித்துவம் செய்துள்ளவர் என்பது உறுதியாகியுள்ளது. இவர் எமது கட்சியின் அங்கத்தவரோசெயற்பாட்டளரோ அல்லர். தேசியப் பட்டியலுக்கு பெயர்கள் முன்மொழியப்பட்டவர்கள் தேர்தலில் போட்டியிடாத பல்துறை சார்ந்தவர்களும் பல இனங்களைப் பிரதிநிதித்துவம் செய்வோருக்குச் சந்தர்ப்பம் வழங்கிய சந்தர்ப்பத்தில் தான் அவருடைய பெயரும் எமது வேட்பாளர் பட்டியலில் இணைக்கப் பட்டிருந்து.

எமது கட்சி ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் செயற்படும் கட்சி. சந்தேகத்தின் பேரில் எமது கட்சி மீது சேறு பூசுவது வங்குரோத்தடைந்த அரசியல் குழுக்கள் தமது துஷ்டத்தனமான நோக்கத்தை அடைவதற்காகவே - என்றுள்ளது. (ம,த)

# இன,மத நல்லுறவை வலுப்படுத்த வேண்டும் சர்வமதக் குழு மாவட்டச் செயலருக்கு மனு

வவுனியா,ஏப்.25


இன, மத நல்லுறவை வலுப்படுத்தி அமைதியை ஏற்படுத்தும் முகமாக சர்வமத குழுவினருக்கும் வவுனியா மாவட்ட செயலர் ஐ.எம்.ஹனீபாவுக்கும் இடையில் மாவட்டச் செயலகத்தில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது சர்வமத குழுவினரால் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களினால் உயிரிழந்த மக்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுவதுடன், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கின்றோம். கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் இன, மத, பேதமின்றி ஒட்டு மொத்த இலங்கை மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளதுடன், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய கொடூரமான தாக்குதல்களை வவுனியா மாவட்ட சர்வ மதக் குழுவினர் ஆகிய நாம் வன்மையாக கண்டிப்பதுடன், வவுனியாவில் மூன்று இனத்தவர்களும், நான்கு மதத்தவர்களும் ஒற்றுமையாகவும், அமைதியாகவும், பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதற்கு சர்வமத குழு ஒத்துழைப்பு வழங்கும். வவுனியா மாவட்ட செயலரும் ஏனைய அதிகாரிகளும் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த உதவ வேண்டும் என கோரியிருந்தனர்.

இதன்போது பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாமிய மதத்தலைவர்கள் கலந்து கொண்டதுடன் குண்டு தாக்குதல் தொடர்பில் தமது கவலையை தனித்தனியாக வெளிப்படுத்தியதுடன், ஒற்றுமையாக பயணிப்பது குறித்தும், தற்போதைய நிலைமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்தும் கலந்துரையாடியிருந்தனர்.

இன, மத ரீதியாக அசம்பாவிதங்கள் ஏற்படா வண்ணம் இருக்க அனைத்து அதிகாரிகளும், முப்படையினரும், பொலிஸாரும், ஒத்துழைப்பு வழங்குவார்கள் எனவும் எந்த நேரமும் ஏதாவது பிரச்சினைகள் எனில் மாவட்ட செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அரச அதிபர் இதன்போது தெரிவித்தார். இந்தக் கலந்துரையாடலில் மதத்தலைவர்கள், மேலதிக மாவட்ட செயலர், உதவிப் பிரதேச செயலர் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.



(க-110)

# நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு அந்தணர் ஒன்றியம் கடும் கண்டனம்

வவுனியா,ஏப்.25

மட்டகளப்பு மற்றும் கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வவுனியா அந்தணர் ஒன்றியச் செயலர் ஜெ.மயூரக்குருக்கள் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளதாவது:
தேவாலயங்கள் மீதான தாக்குதல்கள் கண்டிக்கத் தக்கது. இந்த அசம்பாவித நிகழ்வுக்கு யார் பொறுப்பாளிகளோ அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். இறைவனின் சந்நிதியில் செய்யப்பட்ட இந்த ஈவிரக்கமற்ற கொலைத் தாக்குதல்களால் இறையிடங்களையே தவறுசெய்தவர்கள் மாசுபடுத்திவிட்டனர். தவறுகள் யார் செய்தாலும் சட்டத்தின் முன் தண்டனை வழங்கப்பட வேண்டும். யாரோ ஒரு தரப்பு தமது ஈனத்தனமான இயலாமையின் வெறியாட்டத்தை வெளிப்படுத்தும் செயற்பாடாக இது அமைந்துள்ளது.
ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் உதவிகளை ஒத்தாசைகளை வழங்கி பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஆறுதலாக இருப்போம். கொல்லப்பட்ட ஒவ்வொரு மக்களின் ஆன்மாக்கள் ஆன்ம ஈடேற்றம் பெற அனைவரும் பிரார்த்தனைகள் செய்வோம். என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-110)



நன்றி சிசில் பெர்னான்டோ.

# கொழும்புத் தாக்குதல்கள் தொடர்பில் புலனாய்வு தகவல் கிடைக்கவில்லை

## நியூஸி. தலைமை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

கிறிஸ்ட்சர்ச் மசூதி தாக்குதலுக்கும் இலங்கையில் இடம்பெற்ற தாக்குதல்களுக்கும் தொடர்பிருப்பதாக எவ்வித புலனாய்வு தகவல்களும் எமக்குக் கிடைக்கவில்லை. இவ்வாறு நியூஸிலாந்து தலைமை அமைச்சர் ஜசிந்தா ஆர்டொன் நேற்று அறிவித்துள்ளார்.
நியூஸிலாந்தில் கடந்த மார்ச் மாதம் 15ஆம் திகதி இரு பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டன. இதற்குப் பதிலடி வழங்கும் வகையிலேயே இலங்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர விடுதிகள் தாக்கப்பட்டதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இராஜாங்க அமைச்சரின் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே நியூஸிலாந்து தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை அமைச்சர் குறிப்பிட்டுள்ளமையை உறுதிபடுத்தும் வகையிலான உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதே நேரம், இலங்கையின் விசாரணைகள் தற்போது ஆரம்பக்கட்டத்திலேயே உள்ளது என்பதை தான் புரிந்துகொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

தெய்வீகச் சேவை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டுக்கான முதற்கட்ட நிதி வழங்கல் மற்றும் அறநெறிப் பாடசாலைகளுக்கு சீருடை வழங்கல் ஆகிய நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளன.
இந்த நிகழ்வு நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
எனினும் நாட்டில் இடம்பெற்ற அசாதாரண சூழல் காரணமாக மேற்படி நிகழ்வை பிற்போடுமாறு தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய விவகார அமைச்சர் மனோகணேசன் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அறிவுறுத்தல் வழங்கியதன் பேரில் இந்த நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது.
நிகழ்வு தொடர்பான மேலதிக விவரங்கள் உரிய தரப்பினருக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ)

# ரி.என்.ரி. வெடிபொருளைவிட சக்தி வாய்ந்த வெடிபொருள்

## முன்னாள் பொலிஸ் அதிகாரி

கொழும்பு, ஏப். 25

அல்கய்தா போன்ற தீவிரவாத அமைப்புகள் பயன்படுத்தும் வெடிபொருளே இலங்கையில் வெடித்த குண்டுகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியாக செயற்பட்ட முன்னாள் மூத்தபிரதிபொலிஸ்மா அதிபர் நிமல் லெவ்கே தெரிவித்துள்ளார்.
இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பில், ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே இதைக் கூறியுள்ளார்.
'தாக்குதல்தாரிகள் சில வீடுகளை வாடகைக்கு பெற்றிருந்ததாகவும் ரிஏரிபி வெடிபொருளையே அவர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஏக்ஸ்ரோன் பிரக்சைட் எனும் இரசாயனப்பொருளை அல்கய்தா போன்ற அமைப்புகளே பயன்படுத்துவதாக சுட்டிக்காட்டிய அவர், ரிஎன்ரி வெடிபொருளை விடவும் ரிஏரிபி மிகவும் சக்தி வாய்ந்தது' என்று குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

# வெளிநாட்டுக்கு சென்றவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசில்

மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், சைபிரஸ் ஆகிய நாடுகளுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற்றுச் சென்றவர்களின் பிள்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளன.
ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்திபெற்ற மற்றும் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளன.
இதற்கான விண்ணப்பங்கள் அனைத்து பிரதேச செயலங்களிலும் கோரப்பட்டுள்ளன.
தெல்லிப்பழைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பிரதேச செயலக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அலகுடன்தொடர்புகொண்டு உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-9)

# கார் விபத்தில் மூவர் சாவு

பொகவந்தலாவை,ஏப்.25

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மகிழுந்து(கார்) 80 அடிபள்ளத்துக்குள் வீழ்ந்ததில் மூவர் உயிரிழந்துள்ளனர்.
இந்த விபத்துச் சம்பவம் கொத்மலை நுவரெலியா முதன்மை வீதியின் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. மகிழுந்தின் சாரதியும் காரில் பயனித்த ஒருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மற்றுமொரு நபர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின்னர் உயிர் இழந்துள்ளதாக கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர். விபத்தில் பலியானவர்கள் அட்டபாகே கெக்குலாந்த பகுதியைச்சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மட்டக்களப்பு நிலமையை சேனாதிராசா எம்.பி. ஆராய்வு

மட்டக்களப்பு, ஏப். 25

குண்டுத் தாக்குதலையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைப்பாடுகள், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையின் பௌதீக தேவைகள், பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகள் குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியினர் மட்டக்களப்பு மாவட்டச் செயலரிடம் கேட்டறிந்தனர்.
மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் மாவட்ட செயலர் மா.உதயகுமாருடன் இது பற்றிக் கேட்டறிந்தனர்.
நாடாளுமன்ற உறுப்பினர்



ஞா.சிறிநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன், பொன்.செல்வராசா, தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரும் முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான கி.துரைராஜசிங்கம், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் எஸ்.சத்தியசீலன் மற்றும் பலர் கலந்து கொண்டிருந்தனர்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்படும் இடர்களின்போது உயிரிழப்போரின் சடலங்களை முறையாக பராமரிக்க மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் நவீன வசதிகளுடன் கூடிய சடல அறையை கட்டுவதற்கு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ணவுடன் பேசுவதாக சேனாதிராசா கூறியுள்ளார்.
போதனா மருத்துவமனைச் சட்ட மருத்துவ அதிகாரி பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் மேலும் இரு சட்ட மருத்துவ அதிகாரிகளை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் சேனாதிராசா தெரிவித்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (து)

# தபால் அலுவலகத்தில் வைத்து பொதியிடப்படும் பொதிகளையே தபால் திணைக்களம் ஏற்கும்

## தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரட்ண தெரிவிப்பு

கொழும்பு.ஏப்.25

தற்பொழுது நாடு முழுவதும் நிலவும் பாதுகாப்பு நிலைமையை கருத்திற் கொண்டு உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்கு தபால் மூலம் வழங்குவதற்காக கையளிக்கப்படும் பொதிகள் தபால் அலுவலகத்தின் கருமப்பீட அதிகாரிக்கு அல்லது அதிகாரம்கொண்ட அதிகாரி ஒருவர் முன்னிலையில் பொதியிட்டு ஒப்படைக்கப்படும் பொதிகளை மாத்திரம் தபால் அலுவலகங்கள் பொறுப்பேற்குமாறு அனைத்து தபால் அதிபர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரிய ரட்ண இந்த ஆலோசனையை தபால் நிலைய அதிபர்களுக்கு தெரிவித்துள்ளார்.
இந்த ஆலோசனைக்கு அமைவாக வெளி இடங்களில் இருந்து பொதி செய்யப்பட்டு தபாலில் சேர்ப்பதற்காக பொதிகளை சமர்ப்பிக்க வேண்டாம் என இதன் மூலம் பொது மக்களை கேட்டுக் கொண்டுள்ளார்.
இதற்கமைவாக வெளி இடங்களில் இருந்து பொதி செய்யப்பட்டு எடுத்து வரும் பொதிகளை ஏற்றுக்கொள்வதை கருமப்பீட அதிகாரிகள் நிராகரித்தல் அல்லது பொதிகளை திறந்து காட்டி மீண்டும் பொதியிடுமாறு பொது மக்களுக்கு தபால் அலுவலகங்களில் ஆலோசனை வழங்கப்படக்கூடும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.
இதனால் ஏற்படக் கூடிய சிரமங்களை தவிர்த்துக் கொள்வதற்காக அனைத்துப் பொதிகளையும் தபால் அலுவலகங்களில் பொதியிட்டு கையளிக்குமாறு பொது மக்களிடம் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
இதே போன்று பொதிகளை கையளிப்போர் தமது அடையாளத்தை உறுதி செய்வதன் தேவையையும் தபால்மா அதிபர் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (க)

# மேலதிக அதிகாரங்களை இராணுவத்துக்கு வழங்கவும்

## இராணுவத் தளபதி கோரிக்கை

கொழும்பு, ஏப். 25

நாட்டின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்தத் தேவையான சட்ட அதிகாரத்தை இராணுவத்தினருக்கு வழங்குமாறு அரசதலைவரிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளேன் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தேவையேற்படும் பட்சத்தில் பொலிஸார் இல்லாத நிலையில் வீதி மற்றும் வீடுகளைச் சோதனையிடுவதற்கு இந்தச் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கும் தேவையான சிறப்பு அங்கீகாரத்தை வழங்குமாறு கோரியதாகவும் அவர் தெரிவித்தார்.

கிறிஸ்தவ தேவாலயங்கள், ஐந்து நட்சத்திர ஹொட்டல்கள் உட்பட எட்டு இடங்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் சம்பவத்தையடுத்து பேராயர் கர்தினால் மல்க்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மஹேஷ் சேனாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள பேராயர் இல்லத்தில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்றது.

இந்தசந்திப்பின் போது இருவரும் தற்போதுள்ள நிலைமையை சுமுகப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக கலந்துரையாடியுள்ளனர். இதன் போது இராணுவத் தளபதி தனது அனுதாபத்தைத் தெரிவித்தார். பாதுகாப்புச் சபையில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் கூறினார்.

**புலனாய்வு இங்கு பின்தங்கியுள்ளது**

பாதுகாப்புப் படையினர் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுத் தகவல்கள் தொடர்பில் இதனைவிடக் கூடுதல் கரிசனை கொண்டிருக்க வேண்டும் என்று பேராயர் கேட்டுக் கொண்டார். உலக நாடுகளில் புலனாய்வுத் துறையினருடன் ஒப்பிடுகையில் நாம் பின்தங்கியிருப்பதை இந்தச் சம்பவம் எடுத்து காட்டுவதாகவும் பேராயர் சுட்டிக்காட்டினார்.

இராணுவத் தளபதி மேலும் தெரிவித்ததாவது: இந்தத் தாக்குதல் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது? இது போன்ற சம்பவம் மீண்டும் இடம்பெறாமல் இருக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பாதுகாப்புச் சபைக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டது. ஒவ்வொரு படைகளுக்கும் ஒவ்வொரு விதமான பொறுப்புக்கள் உள்ளன. முப்படை, பொலிஸார், நீதி அமைச்சு ஆகிய தரப்பினர் செய்ய வேண்டிய பொறுப்புக்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக அரசதலைவர் அறிவுறுத்தல்களை வழங்கினார் - என்றார். (த)

## எட்டு மாத குழந்தையையும் விட்டு வைக்காத தாக்குதல்




கொழும்பு, ஏப். 25

நீர் கொழும்பு புனித செபஸ்தியார் ஆலயத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 8 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது. ஈஸ்ரர் வழிபாட்டில் குழந்தையை பேர்த்தியார் ஏந்தியிருந்தார். வழிபாட்டின்போது திடீரென நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் பரிதாபகரமாக உயிரிழந்தது. பேர்த்தியார் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். குழந்தையின் தாய் மற்றும் சகோதரி ஆகியோரும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ,5)



நேற்று முன்தினம் நாடுமுழுவதும் தேசிய துக்கதினம் கடைப்பிடிக்கப்பட்டபோது அமெரிக்க தூதரகத்தில் அந்த நாட்டுக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

## குண்டு வெடிப்பை கண்டிக்கும் யாழ்ப்பாண கிறிஸ்தவ திருச்சபை

யாழ்ப்பாணம்,ஏப்.25

இயேசுவின் உயிர்ப்பின் திருநாளில் இலங்கையிலுள்ள ஆலயங்களிலும் விருந்தகங்களிலும் நடைபெற்ற கொடூரமான தாக்குதல்களை நாம் கண்டிக்கிறோம்.

உறவுகளை இழந்த குடும்பங்கள் மற்றும் உடல் உள காயத்துக்கு உள்ளாக்கப்பட்டோர், கலக்கத்துக்குள்ளாக்கப்பட்டோர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், எமது தோழமையையும் தெரிவிக்கின்றோம்.

எமது துன்பியல் வரலாற்றை மீள நோக்குகையில், எதிரிகள் என நாம் கருதியவர்கள் தொடர்பாக வன்முறை மற்றும் ஆக்கிரமிப்பு பற்றிய எமது மனப்பாங்கில் முரண்படு நிலைப் போக்குகள் இருப்பதையும் எதிர்கொள்கிறோம். அப்பாவிகளின் உயிர்களை பறிக்கும் எவருடைய வன்முறையையும் நாம் நிராகரிக்கின்றோம். இது மீண்டும் ஒரு போதும் நடைபெறக்கூடாது.

இந்த திருநாள் தாக்குதல்களைக் கண்டிக்கும் நாம் 'வாழ்வை' முன்னுரிமைப்படுத்து கின்றோம். அச்சம், அடக்குமுறை மற்றும் வன்முறை அற்ற வாழ்வுக்காக அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த எமது சககுடிமக்கள் எல்லோருக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். ஒரு சிலரின் கொடுமையான கொடூரமான செயல்களுக்காக அப்பழியை எந்த ஒரு சமூகம் மீதும் சுமத்தமாட்டோம்.

இந்த அவலத்திலிருந்து சமூக, பொருளாதார, மத மற்றும் அரசியல் ஆதாயத்தைத் தேடும் அனைவரையும் நாம் நிராகரிக்கின்றோம். இக்கொடிய குற்றங்களைப்பற்றிய உண்மை வெளிவரப்படும் போதும் நீதி வழங்கப்படும் வரையும் அதற்குப் பின்னரும் அனைவரையும் பொறுமையாகவும் அமைதியாகவும் இருக்கும்படி கேட்டு நிற்கின்றோம். எந்த சமூகத்துக்கும் எதிராக கலவரங்கள் அல்லது வன்முறைச் செயற்பாடுகள் நடைபெறாதிருக்க பாதிக்கப்படக் கூடிய நிலையிலுள்ள சமூகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை கோரி நிற்கின்றோம் என யாழ்பாண கிறிஸ்தவ திருச்சபையினர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர். (க)

## கைவிட்ட பொதியால் கொள்ளுப்பிட்டியில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஏப். 25

கொள்ளுப்பிட்டி தொடருந்து நிலையத்தில் காணப்பட்ட பொதி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அங்கு சென்ற பொலிஸார்அந்தப் பொதியில் வெடிகுண்டு இருக்கவில்லையென்று தெரிவித்தனர்.

அது வெடிகுண்டுப்பொதியா இல்லையா என்பதை அறிந்துகொள்ள முன்னர், அந்தப் பகுதியிலிருந்த மக்களை உடனடியாக வெளியேறுமாறு பொலிஸார் அறிவித்தனர். (த)

*முல்லைமாவட்ட*

## போதகர் ஐக்கிய சங்கம் கடுமையான கண்டனம்

முல்லைத்தீவு மாவட்ட போதகர் ஐக்கிய சங்கத்தினர் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளார்கள். சுதந்திரபுரம் பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் சங்கத்தின் தலைவர் மோகேஸ்வரன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளார்.

துக்கதினம் கடைப்பிடிக்கப்படும் நாளில் உறவுகளை இழந்த உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம் காயமடைந்த உறவுகள் விரை வில் குணமடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம். இலங்கை அரசு சகல மக்களுக்கும் உரிய பாதுகாப்பைவழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட போதகர் ஐக்கிய சங்கத்தினர் கோரியுள்ளார்கள். (க-ரி3)

## தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் கண்டனம்

கிறிஸ்தவ மக்களின் புனிதமான வழிபாட்டு தலத்துக்கும், விடுதிகளுக்கும் நடந்த கொடூரமான குண்டுவெடிப்புச் சம்பவங்கள் பல மனித உயிர்களைக் காவுகொண்டுள்ளது.

இது எமக்குக் கவலையையும் மன வேதனையையும் அளிக்கின்றது. இந்த மிருகத்தனமான மனிதநேயமற்ற கொடூரமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என இலங்கை தேசிய கிறிஸ்தவ ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இப்படிப்பட்ட ஈனச்செயலில் ஈடுபடுபவர்கள் இவ்வாறான செயல்களைக் கைவிட்டு மனிதநேயத்தை வளர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்வதோடு இலங்கை அரசு நாட்டையும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும்என்றுகேட்டுக்கொண்டு அமைதியும் நிரந்தர சமாதானமும் இலங்கையில் உண்டாகப் பிரார்த்திக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர். (க)

## இனம் மதம் மொழி கடந்து வன்முறையை ஒழிப்போம்

*யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் கண்டனம்*

யாழ்ப்பாணம்,ஏப்.25

கிறிஸ்தவ மக்களின் புனித வழிபாட்டுக்குரியநாளான ஈஸ்டர்நாளில் நாட்டில் ஏற்பட்ட இடர் மனித நேயம் கொண்ட அனைவரினது இதயத்தையும் சுக்குநூறாக்கியுள்ளது.

மனஅமைதி வேண்டி வாழ்வில் செழுமை வேண்டி இறைபிரார்த்தனையில் ஈடுபட்ட வேளை நடைபெற்றகுண்டுத்தாக்குதல்களினால் உறவுகளைத் தொலைத்து அல்லலுறும் அப்பாவிகளின் இடத்தில் எம்மை வைத்து உணரும் போது இதயத்தின் வேதனை இன்னும் இரட்டிப்பாகின்றது.

ஏனோ தெரியவில்லை இலங்கை தேசத்தில் ஏப்பிரல் மே மாதங்கள் கடந்த சில வருடங்களாக பெரும் இடர்கள் இடம்பெறும் மாதங்களாக மாறிவருகின்றன.

இயற்கை இடர்களால் ஏற்படும் நெருக்கடிகள் தாண்டி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மனித செயற்பாடுகளினால் விளைந்த கொடூரத்தால் பலநூறு உயிர்கள் காவுகொள்ளப்பட்டுள்ளன.

ஒரு சில தீவிரப்போக்குக் கொண்ட வன்முறையாளர்களினால் ஒரு ஒட்டுமொத்த இனக் குழுமத்தின் மீதும் ஏனையவர்களுக்கு வெறுப்புணர்வு ஏற்படும் இயல்பைக் கடந்து செல்வது என்பதும் இலகுவில் முடியக்கூடிய காரியமில்லை. இது நீண்ட தீர்க்க முடியாத வன்மங்களுக்கு வழி செய்து விடும். எனவே ஆளுமையும் ஆற்றலும் கொண்ட நமது அரசியல் தலைவர்கள் தற்போதைய நெருக்கடியை நாட்டின் நன்மை கருதி மிக வும் சாணக்கியமாக அணுகவேண்டியது அவசியமானது. இதனை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளாக முன்வைக்கின்றோம் என யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது. (க)

## கூட்டுறவு சமூகத்தின் கண்டனம்

கொழும்பிலும், மட்டக்களப்பிலும் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புகளின்போது, உயிரிழந்த மக்களுக்குக் கூட்டுறவுச் சமூகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

இன மத மொழி வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதன் என்ற அடிப்படையில் இணைந்து வாழும் உயரிய விழுமியத்தை தன்னகத்தே கொண்ட கூட்டுறவு அமைப்பானது. இந்த மனித குலத்துக்கு எதிரான கொடுமையை வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த விடயம் மனித நேயத்தோடு வாழும் சமூகத்தின் ஒவ்வொரு இதயங்களையும் நொருங்கச் செய்துள்ளது.

மிக மிக அச்சுறுத்தலான இந்தக்கொடுமை மக்கள் மன அமைதிக்காக பிரார்த்தனை செய்யும் வணக்கத்தலங்கள் மீதும் தத்தமது மன மகிழ்வுக்காகக் கூடும் உல்லாச விடுதிகள் மீதும் இடம்பெற்றமை மனிதம் செத்துவிட்டதோ என எண்ணத்தோன்றுகிறது.

உயிரிழந்த பச்சிளம் பாலகர்கள், அப்பாவிமக்கள் அனைவரதும் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். காயமடைந்தவர்கள் விரைவாகக் குணமடைய தெய்வ ஆசியை வேண்டி நிற்கின்றோம். இழப்புக்களைச் சந்தித்த குடும்ப அங்கத்தவர்கள் விரைவாக தேறுதல் அடைய இறைவல்லமைக்காக வேண்டுகிறோம். எனத் குறிப்பிட்டுள்ளனர். (க)

## ‘நான் கேட்டு எனது படம் சுவரேறவில்லை’

# வடக்கு அவைத்தலைவருக்கு முன்னாள் முதல்வர் பதிலடி!

யாழ்ப்பாணம், ஏப். 25

வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனது ஒளிப்படங்களை வடக்கு மாகாண திணைக்கங்களில் இருந்து அகற்றுமாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைர் சி.வி.கே.சிவஞானம் கோரியதற்கு ‘நான் கேட்டு எனது படம் சுவரேற வில்லை’ என முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் பதிலளித்துள்ளார்.

வடக்கு மாகாணத் திணைக்களங்களில் தற்போதும் தொங்கவிடப்பட்டுள்ள சபையின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன், மற்றும் அமைச்சர்களின் ஒளிப்படங்களை அந்தத் திணைக்களங்களில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் சார் பில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

வடக்கு மாகாண சபையின் ஆயுட்காலம் கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதியுடன் காலாவதியாகிவிட்டது. எனினும் பல பாடசாலைகளிலும், திணைக்கங்களிலும் முன்னாள் முதலமைச்சர் மற்றும், கல்வி அமைச்சர் ஆகியோரது படங்கள் காட்சிப் படுத்தப்பட்டிருப்பது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவர்களுடைய படங்கள் திணைக்கங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருப்பதானது அரசியல் ரீதியாகவும் தவறானதாகையால் அவற்றை மீளப்பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

குறித்த விவகாரம் தொடர்பில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமாகிய சி.வி.விக்னேஸ்வரனிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நான் கேட்டு எனது படம் சுவரேறவில்லை. அது சுவர் இறக்கம் செய்யப்படும் போது நான் ஏன் கவலைப்பட வேண்டும்?" என்று முன்னாள் முதல்வர் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையில் விக்னேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அவைத்தலைவரும் அதற்கு ஆதரவாக கையொப்பமிட்டிருந்தார். அதற்குப் பின்னரான அரசியல் வட்டாரங்களில் சி.வி.கே தான் அடுத்த முதலமைச்சர் என்று பேச்சுஅடிபட்டது. எனினும் முதலமைச்சராக விக்னேஸ்வரனே தொடர்ந்திருந்தார். வடக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர், விக்னேஸ்வரன் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளார். அந்தக் கட்சியில் விக்னேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணர் ஒன்றியத்தின் தலைவரை இணைத்துக் கொண்டமையையிட்டு சி.வி.கே கடந்த ஜனவரிமாதம் நல்லூரில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் பேசியிருந்தார். சி.வி.கே. சிவஞானம் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவராக தொடர்கிறார். (ம-21)

### குண்டு வெடிப்பு விசாரணைக்கு அமெரிக்க எப்.பி.ஐ. உதவவுள்ளது

கொழும்பு, ஏப். 25

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பான விசாரணைக்கு அமெரிக்காவின் எப்.பி.ஐ ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்கத் தூதரம் அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் ஊடகப் பேச்சாளர் இதனைக் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 359 ஆக உயர்வடைந்துள்ள தாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

அவ்வாறிருந்தும் குண்டு வெடிப்புக்கள், தொடர்கின்றன. சில இடங்களில் குண்டுகள் மீட்கப்படுகின்றன. இந்த நிலையில் அமெரிக்கா உதவ முன்வந்துள்ளது. (கு)




ஒடிசாவில் பூரி கடற்கரையில் இலங்கை குண்டுவெடிப்பை கண்டித்து மணல் ஓவியம் வரைந்துள்ளார் பிரபல சிற்பக் கலைஞரான சுதர்சன்.

## இலங்கையில் அமைதி நிலவ சீனா மிக தாராளமாக உதவும்

### அந்த நாட்டுத் தலைவர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட இலங்கை அரசு எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்போம் என்று சீனா தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளைத் தொடர்ந்து சீன அரசதலைவரும் தலைமை அமைச்சரும் இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ள அனுதாபச் செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிசேனவுக்கு சீன அரசதலைவர் ஸீ ஸின்பிங் அனுப்பிவைத்த செய்தியில், குண்டு வெடிப்பு சம்பவங்களை கேள்வியுற்று அதிர்ச்சியடைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சீன தலைமைஅமைச்சர் லீ கெகியாங் அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார். (கு)

### குரங்குகள் பார்த்த வேலை

சாவகச்சேரி, ஏப். 25

சாவகச்சேரி கச்சாய் வீதியிலுள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மாதா உருவச்சிலை உடைக்கப்பட்டுள்ளது. குரங்குகள் ப்ாய்ந்து சென்றபோது சிலை உடைந்திருக்கலாமென்று அயலவர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம்பெற்றது. "சத்தம் கேட்டதும் என்னவென்று எட்டிப்பார்த்தபோது, குரங்குகள் பல அந்த இடத்தில் துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தன. அங்கு சென்று பார்த்தபோது மாதா சிலை உடைந்து வீழ்ந்திருந்தது. அதனைச் சுற்றிப் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகளும் நொருங்கியிருந்தன" என்று அயலவர்கள் தெரிவித்தனர். (கு-9)

### எம்.பி.க்களின் பாதுகாப்பைப் பலப்படுத்திய அரசு

# மக்களின் உயிர்களை கணக்கில் எடுக்கவில்லை

### சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.25

இலங்கையில் தாக்குதல் இடம்பெறப் போகின்றது என்பதை அறிந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை அதிகரித்திருந்த அரசு மக்கள் அந்தத் தாக்குதலில் சிக்குவர் என்பதை நினைக்காது. அது பற்றிய அக்கறையின்றி நடந்து கொண்டுள்ளது அதனாலேயே இத்தனை உயிர்கள் பறிபோயின என்று சமூக ஆர்வலர்கள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

ஐ.எஸ்.ஐ.எஸ் தற்கொலைத் தாக்குதல் தாரிகளால் இலங்கையில் 8 இடங்கள் இலக்கு வைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளன. அந்தத் தாக்குதல் சம்பவங்களில் 290 க்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அவ்வாறான தொரு தாக்குதல் நடக்கும் என்று அரசு முற்கூட்டியே அறிந்துள்ளது. அது தற்போது உறுதிசெய்யப்பட்டுள்ளது. சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு பாதுகாப்பை அதிகரித்திருந்தது. அமைச்சரவை பாதுகாப்பு பிரிவினர் இருவரே இதுவரை காலமும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.

ஆனால் சில நாள்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக நான்கு பேரை நியமித்திருந்தது அரசு. கடந்த போர்க் காலத்தில் கூட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இத்தனை பேரை பாதுகாப்புக்காக நியமிக்கவில்லை. தற்போது நியமித்துள்ளது என்றால் பலத்த ஆபத்து இடம்பெறப்போகின்றது என்பதை அரசு தெட்டத்தெளிவாகவே அறிந்துள்ளது.

அப்படிப்பட்ட அரசு மக்களுக்கான பாதுகாப்பை வழங்காது, மக்களைப் பற்றி நினைக்காது அந்த விடயங்களை பொது வெளியில் கூறாது மறைத்துள்ளது. அப்படி ஒரு சம்பவம் இடம்பெறப்போகின்றது என்ற செய்தியை கூறியிருந்தால் மக்கள் கூட்டமாக நேற்று முன்தினம் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்க மாட்டார்கள் என்று சமூக ஆர்வலர்கள் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர். (க-21)

## புதிய ஜும்ஆ பள்ளிவாசல் கட்டடம் திறப்பு நிகழ்வு

மூதூர்.ஏப்.25

குவைத் நாட்டின் நிதி உதவியின் கீழ் மட்டக்களப்பு மண்முனைப் பற்றுப் பகுதியில் புதிய ஜும்ஆ பள்ளிவாசல் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.



கடந்த 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை குவைத் நாட்டின் டகாதுத் பவுண்டேசன் மற்றும் மனித அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதி கலாநிதி மன்சூர் ஜப்பாரினால் உத்தியோகபூர்வமாக திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

பள்ளிவாசலை திறந்து முதலாவது ஜும்ஆ பிரசங்கமும் நிகழ்த்தப்பட்டது.

பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்பால் குவைத் நாட்டு பிரதிநிதிக்கு நினைவுச் சின்னமும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் துறை முகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சர் அப்துல்லா மஹ்ரூப், கிண்ணியா நகர சபை உறுப்பினர் நிஸார்தீன் முஹம்மட், மௌலவி மர்ஜான், பிரதேச மக்கள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள். (க-40)

### திறப்பு விழா

யாழ்ப்பாணம்.ஏப்.25

காரைநகர் கமநல சேவை நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள பாரம்பரிய உணவகத்தின் திறப்பு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார். (ஐ)

# வியட்நாம் வானூர்தித் தளத்தை சுத்தம் செய்கிறது அமெரிக்கா

வோஷிங்டன்,ஏப்.25

வியட்நாமில்உள்ளவானூர்தித்தளம் ஒன்றைப் பல மில்லியன் டொலர்களைச் செலவு செய்து சுத்தம் செய்வதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

வியட்நாம்போர்முடிந்துநான்குதசாப்தங்களுக்கும் மேலாகியுள்ள நிலையில்,இந்தத்திட்டத்தை183மில்லியன் டொலர்கள் செலவில் அமெரிக்கா தொடங்கியுள்ளது.

பத்தாண்டுகள் வரை இந்தத் திட்டம் செயற்பாட்டில் இருக்கும்.

வியட்நாமில்ஹோசிமின்நகரத்துக்கு வெளியே உள்ள பியன் ஹோ என்கிற வானூர்த்தித்தளமேஇவ்வாறுஅமெரிக்காவால் சீரமைக்கப்படவிருக்கிறது.




இங்குதான் 'ஒரேஞ்ச்' எனப்படும் மோசமான இரசாயணம் சேமித்து வைக்கப்பட்டிருந்தது.

வியட்நாமில் மிக மோசமான, அதாவது நச்சுப் பொருள்களால் பாதிக்கப்பட்ட வானூர்திநிலையம் இதுவாகும்.

காடுகளை அழிக்கவும், அதனால் அங்குமறைந்திருந்தவியட்நாமியர்களைக் கண்டுபிடிக்கவும், அமெரிக்கப் படைகள் இந்த 'ஒரேஞ்ச்' இரசாயனத்தைத் தெளித்தனர். இதனால் ஒரு லட்சத்து 50ஆயிரம் குழந்தைகள் குறைபாடுகளோடு பிறந்ததோடு பல கோடிமக்கள் பாதிக்கப்பட்டதாக வியட்நாம்கூறிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## உக்ரைனின் அதிபராகின்றார் நகைச்சுவை நடிகர் ஜெலன்ஸ்கி

கீவ்,ஏப. 25

உக்ரைனில் நடந்த அதிபர் தேர்தலில் அந்த நாட்டின் நகைச்சுவைநடிகர்ஜெலன்ஸ்கிஅமோகவெற்றிபெற்றார். உக்ரைனின் அதிபரான பெட்ரோ பொரஷென்கோவின் (வயது 53), பதவிக் காலம் அடுத்த மாதம் முடிவடைகின்ற நிலையில் அங்கு தேர்தல் நடந்தது இந்தத் தேர்தலில் பெட்ரோ பொரஷென்கோ மீண்டும் போட்டியிட்டார்.

அவரைஎதிர்த்து,அரசியலில்எந்தவிதஅனுபவமும்இல்லாத தொலைக்காட்சி நகைச்சுவை நடிகரான ஜெலன்ஸ்கி (41) களம் இறங்கினார். அரசியலில் மாற்றத்தை விரும்பிய உக்ரைன் மக்கள் ஜெலன்ஸ்கியை ஆதரித்தனர்.

இதனால் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் வென்று அதிபர் தேர்தலில் 74சதவீத வாக்குகளைப் பெற்ற ஜெலன்ஸ்கி அமோக வெற்றி பெற்றார்.





## கடும் மழையைத் தொடர்ந்து கொலம்பியாவில் நிலச்சரிவு

*20 பேர் சாவு*

கரகாஸ்,ஏப்.25

கடும் மழை பெய்துவந்த கொலம்பியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில்சிக்கி20பேர்சாவடைந்தனர். கொலாம்பியாவில் உள்ள கவுகா பகுதியில் கடந்த சில நாள்களாகக் கடும் பெய்து வருகிறது. இதன் காரணமாக அந்தப் பகுதியில் உள்ள நீர் நிலைகளில் வெள்ளம் பெருகி உடைப்பெடுத்து ஓடுகின்றது. குறித்த நீர் நிலைகளை அண்மித்துள்ள குடியிருப்புப் பகுதிகளில் நிலச்சரிவு ஏற்பட்டது.

இந்த நிலச்சரிவில் சிக்கிச் சுமார் 29 பேர் சாவடைந்தனர். பலர் மண்ணுக்குள் புதையுண்டு போயுள்ளதால், அவர்களை மீட்கும் பணி தொடர்ந்து வருகிறது. இதனால் சாவுகள் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# பெண் குழந்தை பெற்ற காரணத்தால் மனைவியைக் கொன்றார் கணவன்

பஞ்சாப்,ஏப்.25

ஐந்தாவதுகுழந்தையும்பெண்ணாகப் பிறந்ததால் தனது குழந்தைகளை ஓரறையில் அடைத்துவிட்டு, தூங்கிக் கொண்டிருந்தமனைவியின்கழுத்தை நெரித்துக் கொன்றார் கணவன்.

இந்தச்சம்பவம்இந்தியாவின்பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலங்களின் தலைநகர் சண்டிகரிலிருந்து சுமார் 81 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அனந்த்பூர் சாஹிப் எனுமிடத்தில் நிகழ்ந்தது.



இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ராகேஷ் குமார் (வயது-43) என்பவரின் மனைவியான அனிதா ராணி (வயது - 35) ஐந்தாவதாகவும் பெண் குழந்தையைப்பிரசவித்தார்.இதனால் ஏற்பட்டமனஉளைச்சல்காரணமாகத் தனது மனைவியைக் கொன்றார் கணவன். ஓர் ஆண் குழந்தையைக் கூடப் பெற்றுத் தரவில்லை என்ற காரணத்தால் அவர் மனைவியைக் கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.

மனைவியைக் கொன்ற அந்த நபர் பிறகு தவறான முடிவெடுத்துத் தனது உயிரையும்மாய்ப்பதற்குமுயற்சிசெய்துள்ளார். தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

**பின்னணி**

ஆண் குழந்தை பிறக்காததை மையமாகக்கொண்டகுடும்பவன்முறைகள் நடப்பது பஞ்சாப்பில் வழமை. பஞ்சாபைப்பொறுத்தவரைக்கருவில்பெண் குழந்தைஇருப்பதுகண்டறியப்பட்டால் அந்தக்கருவைக்கலைக்கும்போக்குச் சாதாரணமான ஒன்றாக இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்தப் போக்குக்கு எதிரான நடவடிக்கையை அரசு அதிகப்படுத்தியது. அதன் காரணமாக அந்தநிலைதற்போதுகுறைந்துள்ளது. கருவை அழிக்கமுடியாதிருந்த நிலையிலே குறித்த குடும்பஸ்தர் தனது மனைவியைக்கொன்றார்.

## இன்றைய நாள்

**மேடம்:** சுயலாபத்திற்காக சிலர் உதவ முன்வருவர். புணக்கடன் பெறுவதை தவிர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பால் வளர்ச்சி காண்பீர்கள். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**இடபம்:** கடந்த கால நற்செயலால் நன்மை காண்பீர்கள். இஷ்ட தெய்வ அருளால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். உபரி வருமானத்தால் சேமிப்பு உயரும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் பொது விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரம் செழிக்க கூடுதல் உழைப்பு தேவைப்படும். பணவிஷயத்தில் விழிப்புடன் இருக்கவும்.

**கடகம்:** தியாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். நண்பர்களால் அனுகூலம் கிடைக்கும். தொழில், வியாபாரம்வளர்ச்சிபெறகூடுதல்நேரம் பணிபுரிவீர்கள். வருமானம் சீராக இருக்கும்.

**சிம்மம்:** வாழ்வில் புதிய வசந்த காலம் உருவாகும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான பணவரவு கிடைக்கும். புதிய வாகனம் வாங்க திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.சேமிப்பு பணம் திடீர் செலவால் கரையும். பெண்களுக்கு அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம்.

**துலாம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரத்தில் இலக்கு படிப்படியாக நிறைவேறும். மூலதன தேவைக்காக கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் நன்மை உண்டாகும்.

**விருச்சிகம்:** முக்கியமான விஷயத்தில் சுமூக தீர்வு ஏற்படும். தொழில் வியாபாரத்தில் முன்னேற கூடுதல் நேரம் பணி புரிவீர்கள்.தாராள பணவரவுகிடைக்கும். பணியாளர்கள் சலுகை பெறுவர்.

**தனுசு:** லட்சியநோக்கத்துடன்செயல்படுவீர்கள். தொழில், வியாபாரவளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**மகரம்:** கூடுதல் பணிகளால் சிரமம் ஏற்படலாம். திட்டமிட்டு செயல்படுவது அவசியம். தொழில், வியாபாரம் ஓரளவு வளர்ச்சி பெறும். பணவரவு சீராக இருக்கும்.

**கும்பம்:** நண்பரின் எதார்த்த பேச்சு சங்கடம் ஏற்படுத்தும்.தொழில், வியாபாரத்தில் சராசரி உற்பத்தி, விற்பனை இருக்கும். பணவரவு மிதமாக இருக்கும்.

**மீனம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும் தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல்நேரம் பணிபுரிவீர்கள். பெண்கள் முக்கிய வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

# தேவாலயத்துக்குச் செலவு செய்ய முடிகிறது எங்களின் அவலத்துக்கு எதுவுமே இல்லை

## என்ற கோசத்துடன் எழுச்சி பெற்றது மஞ்சள் போர்!

பரீஸ்.ஏப்.25

பிரான்ஸ் அரசு எரிபொருளுக்கான வரியை அதிகரித்தமையை எதிர்த்துப் பிரான்ஸ் மக்களால் தொடர்போராட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்தமஞ்சள் அங்கிப் போராட்டம், பிற்காலத்தில் வலுவிழந்தது. காலப் போக்கில் ஒவ்வொரு சனிக்கிழமைகளில் மட்டுமே இது இடம் பெற்று வருகிறது. சனிக்கிழமைகளில் சராசரியாக 7ஆயிரத்து 500 போராட்டக்காரர்களைக் கொண்டதாக நடந்துவந்தது இந்தப் போராட்டம். கடந்த சனிக்கிழமை இதில் பங்குகொண்ட போராட்டக்காரர்களின் தொகை 9ஆயிரத்து 600ஆக அதிகரித்தது.



குறித்த சனிக்கிழமையன்று அதிகளவில் ஒன்றுதிரண்ட போராட்டக்காரர்கள் "நோட்ரேடெம் கதிட்ரல் தேவாலயத்தின் திருத்த வேலைகளுக்கு 1.12 பில்லியன் டொலர்கள் செலவுசெய்ய முடிகிறது. ஆனால் துன்பப்படும் எங்களுக்கு எதுவுமே இல்லை" என்ற சுலோகங்களை ஏந்தி நின்றனர்.

# வடக்கு அயர்லாந்தில் கலவரம் பத்திரிகையாளர் சுட்டுக் கொலை

பேல்பாய்ற்.ஏப்.25

வடக்கு அயர்லாந்தில் நடந்த கலவரம் ஒன்றில் பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இது அந்த நாட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வடக்கு அயர்லாந்தின் சிரிகனில் என்ற பகுதியிலேயே இந்தக் கலவரம் நடந்தது. சுட்டுக்கொல்லப்பட்ட பத்திரிகையாளர் லைரா மெகீ என்கிற நபர் என்று அறியப்பட்டுள்ளது. கலவரத்தின் போது பெட்றோல் குண்டுகளை வீசிய சிலர் துப்பாக்கிச் சூட்டையும் நடத்தினர். இதனால் இதைத் தீவிரவாத நிகழ்வாகக் கருதியே அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த வன்முறை குறித்து வடக்கு அயர்லாந்தின் தலைமை அமைச்சர் லியோ கூறும் போது,





"வன்முறை, பயம், மற்றும் வெறுப்பு ஆகியவற்றைப் பரப்ப விரும்புபவர்களை நாம் அனுமதிக்க முடியாது" என்று தெரிவித்தார். பிரிட்டனின் தலைமை அமைச்சர் தெரசா மே, "அதிர்ச்சியளிக்கிறது. இது புரிதலற்றது" என்றார்.



**பின்னணி**

வடக்கு அயர்லாந்தில் இந்த வன்முறைச் சம்பவம் உயிர்த்த ஞாயிறு வாரம் ஆரம்பித்ததிலிருந்தே நடந்து வருகிறது. அங்கிருந்து பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக அங்குள்ள குடிமக்கள் தொடர்ந்து வன்முறையில் ஈட்டுபட்டு வருகின்றனர். கொல்லப்பட்ட பத்திரிகையாளர் லைரா அட்லாண்டிக் போன்ற பத்திரிகைகளில் பணிபுரிந்துள்ளார். போர்ப்ஸ் பத்திரிகையில் 2016ஆம் ஆண்டில் ஊடகத்தில் சிறப்பாகப் பணியாற்றியவர்கள் பட்டியலில் இவரது பெயரும் இடப் பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மியான்மர் சுரங்கத்தில் நிலச்சரிவு 50 பேர் சாவடைந்ததாகத் தகவல்

யாங்கூன்.ஏப்.25

மியான்மரில் பச்சை மாணிக்கக் கல் வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் நேற்று ஏற்பட்ட நிலச்சரிவில் சுமார் 50 பேர் சாவடைந்திருக்கலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


மியான்மரின் கச்சின் மாநிலத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. 55 தொழிலாளர்கள் சுரங்கத்தின் ஆழமான பகுதியில் வேலையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஏற்பட்ட இந்த நிலச்சரிவால் அவர்களில் எவரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது.

# ரஷ்யாவுக்குப் பயணித்தார் கிம்

சியோல்.ஏப்.25

வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன், தன்னுடைய சிறப்புத் தொடரூந்து மூலம் ரஷ்யாவுக்கான தனது பயணத்தை நேற்று ஆரம்பித்தார். அவர் இன்று ரஷ்ய அதிபர் புடினைச் சந்திக்க உள்ளார். இந்தச்சந்திப்புலடிவஸ்டெக்என்றஇடத்தில் இடம்பெறும்எனரஷ்ய அதிபர் மாளிகை அறிவித்தது. இந்தச் சந்திப்பில் அணு ஆயுத உற்பத்தி விவகாரம் பற்றிக் கலந்துரையாட உள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கஅதிபர் டொனால்ட்ட்ரம்ப்புக்கும்கிம்முக்கும்இடையில், இடம்பெற்று வந்தபேச்சுக்கள்தோல்வியில்முடிந்திருக்க, கிம் புடின்பேச்சு நடப்பது குறிப்பிடத்தக்கது



பிரான்சின் பழமையான தேவாலயமான நோட்ரோ டேம் கதிட்ரல் தீக்கிரையானதுடன் தொடர்புடைய இரண்டு விடயங்கள் தற்போது பேசுபொருளாகியிருக்கின்றன. தீப்பிடித்து எரிந்த தீப் பிளம்புக்கிடையே இயேசுவின் உருவம் தெரிகின்றது என்று சமூக வலைத்தளங்களில் பலரும் பதிவிட்டனர். அத்தோடு அந்தத் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அந்த நாட்டின் தீயணைக்கும் பணியாளர்களுடன் இணைந்து செயற்பட்ட 'கொலோசஸ்' என்ற தீயணைப்பு ரோபோவும் போற்றப்பட்டுவருகிறது. தீயின் வெப்பத்தைத் தாங்கும் வகையில் பிரான்ஸால் வடிவமைக்கப்பட்ட இந்த ரோபோவானது எரிந்து, உடைந்து விழுந்துக்கொண்டிருந்த கட்டட இடர்பாடுகளுக்கிடையில்பயணித்து, தீயணைப்புப் பணியாளர்கள் நெருங்க இயலாத அதி வெப்பமான பகுதிகளையும் நெருங்கித் தீயை அணைத்தது பற்றி அதிகம் பேசப்படுகிறது.

# நடுங்கியது பிலிப்பைன்ஸ்

மணிலா.ஏப்.25

பிலிப்பைன்சில் நேற்றுமுன்தினம் நிலநடுக்கம் ஏற்பட்டது.

பிலிப்பைன்சின் துடுபிகான் என்ற பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. இந்த நிலநடுக்கம் 6.4 ரிக்டர் அளவுகோலில் பதிவானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பத்பன்கா மாகாணத்தில் பல நகரங்கள் அதிர்ந்தன.

அடுக்குமாடி வீடுகள், கட்டடங்கள் இடிந்து விழுந்தன. போரக் நகரில் 4 மாடிகளைக் கொண்ட ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது. அதில் சிக்கித் தவித்த பலர் மீட்கப்பட்டனர். இந்த நிலநடுக்கத்தில் ஏற்பட்ட இடிபாடுகளில் சிக்கி 6 பேர் சாவடைந்தனர்.

# தற்கொலைதாரிகளான தெமட்டகொட சகோதரர்களின் படங்கள் வெளியீடு!

## இங்கிலாந்தின் 'டெய்லி மெயில்' பத்திரிகை அதிரடி




கொழும்பு, ஏப். 25

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல்களான சினமன் கிராண்ட் ஹோட்டல், கிங்ஸ்பெரி ஹோட்டல் ஆகியவற்றில் குண்டுத் தாக்குதல்களை நடத்திய தற்கொலைதாரிகளான தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த இரு சகோதரர்களின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இங்கிலாந்தின் 'டெய்லி மெயில்' பத்திரிகை இந்தப் படங்களை வெளியிட்டுள்ளது.

இன்ஷாப் இப்ராஹிம் மற்றும் இல்ஹாம் இப்ராஹிம் ஆகியோரின் படங்களே வெளியிடப்பட்டுள்ளன.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களின் பின்னர் இவர்களின் தந்தையான பிரபல வர்த்தகர் இப்ராஹிம் தெமட்டகொடவில் வைத்துப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)



யாழ்ப்பாணம், ஒஸ்மானியாக் கல்லூரியின் 1988ஆம் ஆண்டு குழுமத்தின் 50ஆம் ஆண்டு பொன் விழா நீர்கொழும்பு ஒலன்ராகன்ஸ் வியூ கார்டன் விடுதியில் கடந்த 20ஆம் திகதி கொண்டாடப்பட்டது. தென் கிழக்குப் பல்கலைக் கழகத்தின் கலை, கலாசார பீடத்தின் பேராசிரியர், கல்லூரியின் இளைப்பாறிய அதிபர்கள், ஆசிரியர்கள், தற்போதைய அதிபர், குழுமத்தின் உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினர் எனப் பலர் நிகழ்வில் பங்கு கொண்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. (எ.26)

## பொலிஸ் அதிகாரியின் பூதவுடலுக்கு நேற்று மைத்திரிபால அஞ்சலி

தெமட்டகொட வெடிப்புச் சம்பவத்தில் பலியான பொலிஸ் பரிசோதகர் டப்ளியு.எம்.ரோஹணை பண்டாரவின் பூதவுடலுக்கு அரசதலைவர் இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார். தெமட்டகொட மேம்பாலத்துக்கு அருகில் வீடொன்றைச் சோதனை செய்வதற்குச் சென்றபோது, கொழும்பு குற்றப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் டப்ளியு.எம். ரோஹண பண்டார குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார். பிலியந்தலை, பட்டுவந்தரவில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்ற மைத்திரிபால சிறிசேன நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார். அந்தச் சம்பவத்தில் 3 பொலிஸ் அலுவலர்கள் கொல்லப்பட்டிருந்தனர். (த)

# தாக்குதலுக்கு பொறுப்பேற்க வேண்டிய முதலாவது நபர் அரச தலைவரேதான்

## சட்டவிரோதமாக வைத்திருக்கும் அமைச்சே அதற்குக் காரணம் என்று சுமந்திரன் சாட்டை

கொழும்பு, ஏப். 25

கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவின்போது இலங்கையில் பரவலாக நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அரச தலைவரே பதில் வழங்க வேண்டிய முதலாவது நபராக உள்ளார். சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சை சட்டத்துக்கு விரோதமான வகையில் தன்வசம் வைத்துள்ளதமையே இதற்குக் காரணம் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று உரையாற்றுகையியேலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறேன். இந்த சமயத்தில் இலங்கையின் கிறிஸ்தவ தேவாலயத்தின் துன்பத்தில் நான் பங்கு கொள்கிறேன். இந்த உலகத்துக்கு வந்து எம்மைப்போலவே பாடுகளை அனுபவித்து தீமையின் கொடுமை முழுவதையும் தன்மேல் எடுத்துக்கொண்டு, அநீதியான முறையில் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்துவை நாம் விசுவசிக்கிறோம். அவர் சகல தீமையையும் தன்னையே தியாகம் செய்யும் அன்பினால் முறியடித்தார். இதனையே நாம் அவரது உயிர்ப்பின் நாளாகிய ஈஸ்டர் தினத்தன்று கொண்டாடுகின்றோம். நாம் துக்கமடைந்திருகின்றோம் ஆயினும் வெறுப்பும் பழிவாங்குதலும் எம்மை ஆட்கொள்ள நாம் இடமளியோம்.

இந்த படுகொலைக்கு பொறுப்பானவர்கள் தண்டனையேதும் இன்றி தப்பிப் போகாலம் என்பது இதன் பொருளாகாது. மாறாக வெறுப்பின் செய்கையை புரிந்த குற்றவாளிகளுக்கு எதிராக நாமும் வெறுப்போடு செயற்பட மாட்டோம் என்பதே இதன் பொருளாகும். பழிவாங்குதலை நோக்காக கொண்டிராமல் உண்மை, பொறுப்புப் கூறல் மற்றும் நீதியை நோக்காக கொண்டு செயற்படல் வேண்டும். குற்றவாளிகளை முழு முயற்சியோடு பின்தொடர்ந்து பிடித்து சட்டத்துக்கு அமைவாக நீதியின் முன்னிறுத்துவது அரசின் கடமையாகும். தகவல் கிடைத்திருந்தும் ஏன் தடுப்பு நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை என்கின்ற மிக முக்கியமான கேள்விகள் எழுந்திருக்கின்றன. இதற்கு பொறுப்பானவர்கள் உயர் பதவியில் இருப்பவர்கள் முதலாவதா ஆகக் குறைந்தது தம் பதவிகளில் இருந்து விலக வேண்டும். பொலிஸ் துறையை அரசதலைவர் தன் பொறுப்பின்கீழ் வைத்திருப்பது தொடர்பில் வரவு - செலவு விவாதத்தின் போது நான் கேள்வி எழுப்பினேன். இது தெளிவாக அரசியலமைப்புக்கு முரணானது. 19 வது திருத்தம் நிறைவேற்றப்பட்ட போது, சட்டம் மற்றும் ஒழுங்கு என்று அழைக்கப்படும் தனி அமைச்சின் கீழ் காவல்துறை உள்ளடக்கப்பட்டது. அரசதலைவர் தன் கீழ்கொண்டிருக்க கூடிய 3 விடயங்களை அரசியலமைப்பு அடையாளப்படுத்தி காட்டுகின்றது. அவையாவன - பாதுகாப்பு, மகாவலி மற்றும் சூழல் என்பனவாகும். சட்டம் மற்றும் ஒழுங்கு அதில் இல்லை. இந்த அமைச்சை சட்டவிரோதமாக தான் வைத்திருப்பதன் மூலம் தடுத்து நிறுத்தியிருக்க கூடிய இத்தாக்குதல்களுக்கு இப்போது அரசதலைவர் தானே பொறுப்பை ஏற்கவேண்டிய முதல் நபராகிவிட்டார்.

கிழக்கு மாகாண ஆளுநருக்கும் தேசிய தௌஹீத் ஜமாத் இற்கும் இடையே உள்ள தொடர்புகள் பற்றி பல முக்கிய கேள்விகள் எழுந்துள்ளன. இது விசாரிக்கப்பட வேண்டும். அவ்வாறே, இந்த குழுவானது பல் வேறு அரசியல்வாதிகள் மற்றும் முந்தய பாதுகாப்பு அதிகாரிகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (ம-22)

### பருத்தித்துறை...

ணமாக நாட்டின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பருத்தித்துறையில் வாழும் இஸ்லாமியர்களின் விவரங்களைச் சேகரிக்கும் நோக்குடன் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் விவரங்களைப் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் கேட்டபோது, ஒருயொரு குடும்பம் மாத்திரமே பிரதேச செயலகத்தில் பதிவுகளை மேற்கொண்டு தங்கியுள்ளனர் என்பது தெரியவந்தது. அதனையடுத்து பருத்தித்துறை பள்ளிவாசலுக்குச் சென்ற பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர் அங்கிருந்த மௌலவியிடம் அந்தப் பகுதியில் வசிக்கும் இஸ்லாமியர்களின் விபரங்களை கேட்டிருந்தனர். அதன்படி விவரங்களை மௌலவி நேற்றுக் கையளித்துள்ளார். பருத்தித்துறைப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் பல இஸ்லாமியர்கள் தங்கி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-37)

**மரண அறிவித்தல்**

**கந்தசாமி தேவி**



பிறப்பு 09.06.1950 இறப்பு 20.04.2019

கோண்டாவில்வடக்கை பிறப்பிடமாகவும் லுசாந் சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி தேவி கடந்த 20.04.2019 அன்று இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.04.2019) வெள்ளிக்கிழமை சுவிஸில் சுவிஸ் நேரப்படி காலை 8.00 மணி தொடக்கம் 10 மணி வரை நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

077 998 3714 (சிவா)
0441764909554(றொபின்)

### தொலைக்...

இலத்திரனியல் பொருள்கள் விற்பனை நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு மர்ம நபர் ஒருவர் தீ வைத்துக் கொளுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விற்பனை நிலையத்துக்கு முன்பாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தொலைக்காட்சிப் பெட்டிகள் இரண்டுக்கு அவர் தீ வைத்துக் கொளுத்தியுள்ளார்.

நீளக்காற்சட்டையும் முழுக்கை சட்டையும் அணிந்த மர்ம நபர் ஒருவர் கையில் தீ பெட்டியுடன் அதிகாலை 5.39 மணிக்கு வந்து தொலைக்காட்சி பெட்டிகளுக்கு தீ வைத்து அவற்றை கொளுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்பது அங்கிருந்த மறைகாணியில் பதிவாகியுள்ளது. பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர். (த-37,173)

### வடக்கு...

துக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து பல இடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாண சபைக்கு நேற்றுமுன்தினம் தொடக்கம் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு குண்டுத் தாக்குதல்களையடுத்து நாட்டில் அதிகளவான முக்கியமான வழிபாட்டுத் தலங்களில் இராணுவ மற்றும் பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை வளாகத்தில் பல திணைக்களங்கள் மற்றும் மாகாண அமைச்சுக்களின் அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவற்றுக்கு மக்கள் நாளாந்தம் வருகைதந்து சேவைகளைப் பெற்று செல்கின்றனர். வடக்கு மாகாண முதலமைச்சர் அமைச்சு அலுவலகத்தில் பிரதி புதன்கிழமைகளில் வடக்கு மாகான ஆளுநர் சுரேன் ராகவன் தலைமையில் பொதுமக்கள் சந்திப்பு இடம்பெற்று வருகிறது. தற்போதைய சூழ்நிலை காரணமாக பொதுமகள் சந்திப்பு நேற்று நடைபெறவில்லை. (ம-த)

# யாழ். மாவட்டக் கபடியில் சண்டிலிப்பாய் வென்றது



யாழ்ப்பாணம், ஏப். 25

யாழ்ப்பாணம் மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கபடித் தொடரில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதியது. 39:29 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## வவு. தெற்கு செயலகம் கபடித் தொடரில் மகுடம்

யாழ்ப்பாணம், ஏப். 25

வவுனியா மாவட்ட செயலகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கபடித் தொடரில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

வவுனியா நகரசபை மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் வவுனியா தெற்கு பிரதேச செயலக அணியை எதிர்த்து வவுனியா வடக்கு பிரதேச செயலக அணி மோதியது.

68:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வவுனியா தெற்கு பிரதேச .செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)

## பாகிஸ்தானுக்கு பெருமையை பெற்றுத் தாருங்கள்

### *இம்ரான்கான் அறிவுரை*

மே மாதம் இங்கிலாந்தில் ஆரம்பமாகும் உலக கிண்ணப்போட்டிகளில் பாகிஸ்தான் அணி ஆக்ரோசத்துடன்விளையாடவேண்டும் என பாகிஸ்தான் தலைமை அமைச்சர் இம்ரான்கான் ஆலோசனை வழங்கியுள்ளார்.

பாகிஸ்தான் அணியை சந்தித்த இம்ரான்கான் கூறியதாவது:

1992ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை ஆக்ரோசத்துடனும் துணிச்சலுடனும் விளையாடியே கைப்பற்றினோம். நீங்கள் இலக்குகளை வீழ்த்தினால் எதிரணியினர் அழுத்தங்களுக்கு உள்ளாவார்கள் அதுஉங்களுக்குசாதகமான நிலையை ஏற்படுத்தும்.

ஓர் அணியாக நாங்கள் விளையாடியதும் வெற்றிக்கான காரணம். பாகிஸ்தான் அணியின் தலைவர் சப்பிராஸ் அகமட்டை திறமையான தலைவர். அவரை அணியை முன்னணியில் நின்று வழிநடத்துமாறும் ஆலோசனை வழங்கினார்.

அணித்தலைவருக்கு ஒவ்வொரு வீரரினதும் பலமும் பலவீனமும் தெரிந்திருக்கவேண்டும். சூழ்நிலைக்கு ஏற்ப திறமையைப் பயன்படுத்துங்கள். பாக்கிஸ்தான் என்ற பெயருக்க பெருமையை பெற்றுத்தாருங்கள் - என்றார்.



# கடற்கரைக் கரப்பந்தாட்டம் பச்சிலைப்பள்ளி வென்றது!



யாழ்ப்பாணம், ஏப். 25

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

கிளிநொச்சி தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணியை எதிர்த்து கரைச்சி பிரதேச செயலக அணி மோதியது. 21:13, 21:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணி வெற்றிபெற்றது. (ம-23)



## அமரகவி இளைஞர் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், ஏப். 25

நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தொடரில் கிண்ணம் வென்றது அமரகவி இளைஞர் கழக அணி.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அமரகவி இளைஞர் கழக அணியை எதிர்த்து அரியாலை சரஸ்வதி இளைஞர் கழக அணி மோதியது. 3:1 செற் கணக்கில் அமரகவி இளைஞர் கழக அணி வெற்றி பெற்றது. (ம-23)

## ஆட்டங்கள் பிற்போயின

யாழ்ப்பாணம், ஏப். 25

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், கல்லூரியில் துடுப்பாட்டம் ஆரம்பிக்கப்பட்டு 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் நடத்தப்படும் ரி-20 தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையால் பிற்போடப்பட்டுள்ளன. (ம-23)

## ஆதிசக்தி, டயமன்ஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஏப். 25

லண்டன் வல்வை புளூஸ் நண்பர்களின் அனுசரணையுடன் வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தும் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் டயமன்ஸ், ஆதிசக்தி அணிகள் வெற்றிபெற்றன.

டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான இந்த ஆட்டத்தில் டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்:ந்து இடம்பெற்ற ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணிக்கும் நவசக்தி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## மன்னார், மடு சம்பியன்

மன்னார் மாவட்ட பிர்தேச செயலகங்களுக்கு இடையிலான இருபாலாருக்கமான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் மன்னார் பிரதேச செயலக அணியும், பெண்கள் பிரிவில் மடு பிரதேச செயலக அணியும் கிண்ணம் வென்றன.

நானாட்டான் பொது மைதானத்தில் அண்மையில் இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் மன்னார் பிரதேச செயலக அணியை எதிர்த்து நானாட்டான் பிரதேச செயலக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நானாட்டான் பிரதேச செயலக அணி 40 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மன்னார் பிரதேச செயலக அணி 25 பந்துகளில் 3 ஓட்டங்களைப்பெற்று வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் மடு பிரதேச செயலக அணியை எதிர்த்து முசலி பிரதேச செயலக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மடு பிரதேச செயலக அணி 40 பந்துகளில் 2 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முசலி அணி ஓர் ஓட்டத்தை மட்டும் பெற்றுத் தோல்வியடைந்தது. (ம-23)

## வெற்றியின் ரகசியம் சொல்லமாட்டேன்

### டோனி நெகிழ்ச்சி

12ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை -ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் சென்னை அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றி குறித்து சென்னை அணித் தலைவர் டோனி தெரிவிக்கையில்:

தனி நபர்களால் சில ஆட்டங்களில் சென்னை அணிக்கு வெற்றி கிடைத்தது. பல போட்டிகளில் அணியாக வெற்றி பெறுகிறோம். வற்சன் சில ஆட்டங்களில் சிறப்பாக செயற்படாவிட்டாலும் அவருக்கு ஆதரவு அளிப்பது அவசியமானது. கடந்த ஆண்டு அவர் பல்வேறு ஆட்டங்களில் திறமையை வெளிப்படுத்தினார்.

இந்த வெற்றியின் மந்திரத்தை வெளியில் சொல்லக்கூடாது. ஏனென்றால் ஏலத்தில் என்னை வாங்க மாட்டார்கள். அது வியாபார ரகசியம்.

சென்னை அணியின் வெற்றிக்கு ரசிகர்கள் மற்றும் நிர்வாகிகளின் ஆதரவு. சென்னை அணியின் பணியாளர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். இதைத் தவிர நான் ஓய்வு பெறும் வரை வேறு எதையும் சொல்ல மாட்டேன்- என்றார்.






## வற்சன் காட்டடி
# ஹைதராபாத்துக்கு சென்னை பதிலடி



12ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் - சன்ரைஸ் ஹைதராபாத் அணிகள் மோதின. இதில் சென்னை அணி வற்சனின் அதிரடியில் 6 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் சென்னை அணி புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது. அத்துடன் 'பிளே ஒவ்' சுற்றுக்குள் நுழைந்த முதலாவது அணியாகவும் காணப்படுகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் ஹைதராபாத் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மனிஸ் பாண்டே ஆட்டமிழக்காமல் 3 ஆறு ஓட்டங்கள், 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 83 ஓட்டங்களைப் பெற்றார். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் வோர்னர் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி 57 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 2 இலக்குகளையும், சாஹர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணி முதலிரண்டு பந்துப்பரிமாற்றங்களிலும் தடுமாறியிருந்தது. டூபிளசிஸ் ஓர் ஓட்டத்தைப் பெற்ற நிலையில் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார். களமிறங்கிய ரெய்னா அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிரடியாக' அதிகரித்தார். அவர் களமிறங்கியது முதல் பந்துகளை எல்லைக் கோடுகளுக்கு வெளியே அனுப்புவதில் குறிக்கோளாய் இருந்தார். அவர் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். மறுமுனையில் வற்சன் அதிரடி காட்ட ஆரம்பித்தார். அவரைக் கட்டுப்படுத்துவதற்கு ஹைதராபாத் பந்து வீச்சாளர்கள் முயன்றும் பயனில்லை. இறுதியில் புவனேஸ்வர்குமாரின் பந்து வீச்சில் 6 ஆறு ஓட்டங்கள் 9 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக தனது சதத்தைத் தவற விட்டு 96 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வற்சனின் இந்த ஆட்டம் கடந்த ஐ.பி.எல். போட்டியை நினைவுபடுத்தியதாக இருந்தது. நடப்பு ஐ.பி.எல்லில் அவர் நடைபெற்று முடிந்த 10 போட்டிகளில் 20 ஓட்டங்களைத் தாண்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால் எழுந்த விமர்சனங்களுக்கும் வற்சன் இந்தப் போட்டியில் பதிலடி கொடுத்தார். அணி ஓர் பந்து மீதமிருக்க வெற்றி இலக்கை அடைந்தது. ஆட்டநாயகனாக சென்னை அணியின் வீரர் வற்சன் தெரிவு செய்யப்பட்டார்.

# வீதிகளில் நடக்க பயமாகவுள்ளது

### இலங்கை கிரிக்கெட் வீரர் தசுன் ஷனாகா தெரிவிப்பு



இலங்கையில் ஈஸ்டர் அன்று தொடர் குண்டு வெடிப்பு நடைபெற்றது. நீர்கொழும்பு பகுதியில் உள்ள புனித செபஸ்டியன் தேவாலயத்திலும் குண்டு வெடித்தது. இந்த தேவாலயத்துக்கு அருகில்தான் இலங்கை கிரிக்கெட் வீரர் தசுன் ஷனாகா வீடு உள்ளது. ஞாயிற்றுக்கிழமை காலையில் இவரும் பிராத்தனைக்கு சென்றிருப்பார். ஆனால், சனிக்கிழமை முழுவதும் வெளியே சென்றிருந்ததால் அவர் ஞாயிற்றுக்கிழமை காலையில் சிறப்பு பிரார்த்தனைக்கு செல்லவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து ஷனாகா தெரிவிக்கையில்; வழக்கமாக நான் தேவாலயத்துக்குச் சென்றிருக்க வேண்டும். ஆனால், நான் முதல்நாள் வெளியில் சென்றிருந்ததால் மிகவும் சோர்வாக இருந்தேன். அதனால் செல்லவில்லை.

ஞாயிற்றுக்கிழமை காலையில் நான் வீட்டில் இருந்த போது, வெடி வெடிக்கும் சத்தம் கேட்டது. சிறிது நேரம் கழித்து மக்கள் தேவாலயத்தில் குண்டு வெடித்ததாக கூறினார்கள். நான் சம்பவ இடத்துக்கு விரைந்தேன். அப்போது கண்ணால் கண்ட சம்பவத்தை என்னால் மறக்கவே முடியாது.

தேவாலயம் முழுவதும் சிதைந்து காணப்பட்டது. உயிரிழந்தவர்களை மக்கள் வெளியே இழுத்துக் கொண்டு வந்தார்கள். அந்தச் சம்பவத்தை நீங்கள் பார்த்தீர்கள் என்றால், தேவாயலத்துக்குள் இருந்தவர்கள் ஒருவர் கூட உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். ஏனென்றால், குண்டு வெடிப்பால் சிதறிய சிறு துகளால் அருகில் உள்ளவர்கள் கூட காயம் அடைந்துள்ளனர்.

எனது அம்மாவும், பாட்டியும் தேவாலயம் சென்றிருந்தார்கள். ஆனால் இருவரும் உயிர் பிழைத்து விட்டனர். இந்தச் சம்பவம் பாதுகாப்பு குறித்து யோசிக்க வைத்துள்ளது. வீதிகளில் நடக்கவே பயமாக உள்ளது- என்றார்.



## உலகக் கிண்ணத்தில்
# பாக். அணி பலவீனமான அணியாகவே இருக்கும்

### சர்பிராஸ் அகமட் தெரிவிப்பு

எதிர்வரும் மே மாதம் இங்கிலாந்தில் உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதில் இந்தியா - பாகிஸ்தான் போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதுவரை இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பாகிஸ்தான் அணி வென்ற வரலாறு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பிராஸ் அகமட் தெரிவிக்கையில்:

எங்களைப் பொறுத்த வரையில் உலகக் கிண்ண போட்டிகள் அனைத்தும் மிக முக்கியமானவை. அதனால் நாம் ஆடும் ஒவ்வொரு போட்டியையும் இந்தியாவுக்கு எதிராக ஆடுவதைப் போலவே ஆடுவோம். நாம் சமீபத்தில் நடைபெற்ற பெரிய தொடரில் இந்திய அணியை வீழ்த்தியுள்ளோம். இதனால் அந்தச் சாதக நிலை எங்களுக்கு உள்ளது. நாங்கள் பலவீனமான அணியாகவே இருந்து விட்டுப் போவோம். ஏனெனில் எங்களுக்குத்தான் உலகக் கிண்ணம் என்று போனால் அது எங்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்கும். ஆகவே நாம் பலவீனமான அணியாகவே இருக்க விரும்புகின்றோம் - என்றார்.

# பார்சிலோனா அபார ஆட்டம்

ஸ்பானியக் கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் பார்சிலோனா அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா - அலாவிஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் முதல் பாதி ஆட்டத்தில் கோல்கள் எதனையும் பெறவில்லை. இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்து 54ஆவது நிமிடத்தில் கார்லிஸ் அலின்னா ஒரு கோலைப் போட்டார். மீண்டும் 60ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணிக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பைப் பயன்படுத்தி அந்த அணி வீரர் சுராஜ் ஒரு கோலைப் போட அந்த அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலிருந்தது. இறுதி நிமிடங்கள் வரையிலும் அலாவிஸ் அணி போராடிய போதிலும் அவர்களால் எந்த விதமான கோல்களையும் பெற முடியாது போக இறுதியில் பார்சிலோனா அணி 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.



## மாடி வீடு விற்பனைக்கு

பாண்டியன் தாழ்வில் அன்னம்மாள் ஆலயத்திற்கு அருகாமையில் பிரதான வீதியில் 2 கடைகள் அடங்கலாக மாடிவீடு விற்பனைக்கு உண்டு. 076 300 2364, 077 662 4364

# கிரிக்கெட் ரசிகர்கள் மீது பொலிஸார் தடியடி



12ஆவது ஐ.பி.எல். போட்டியில் நாளை இடம்பெறவுள்ள சென்னை - மும்மை அணிகளுக்கான போட்டி சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தப் போட்டியைப் பார்ப்பதற்கான குறைந்த டிக்கெட் விலை 1300 ரூபாவாகும் .தனை வாங்குவதற்காக ரசிகர்கள் நேற்றுக் காலையில் இருந்து திரண்டு வந்தனர்.

அவர்கள் நீண்ட வரிசையில் காத்து நின்றனர். அவர்களிடையே நெரிசல் ஏற்படாமல் இருக்க சவுக்கு கட்டைகள் மூலம் தடுப்பு வேலிகளும் அமைக்கப்பட்டிருந்தது. கூட்டம் அதிகமாக இருந்ததால் ரசிகர்கள் டிக்கெட் வாங்க முண்டியடித்தனர். இதனால் பொலிஸாருக்கும் ரசிகர்களுக்கும் இடையே சிறிது மோதல் ஏற்பட்டு, போக்குவரத்து நெரிசல்களும் இடம்பெற்றது. இதனையடுத்து பொலிஸார் தடியடி நடத்தினர். இதனால் அந்தப் பகுதியில் சிறிது பதற்றம் ஏற்பட்டது.

## ALLIANCE FRANCAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

071 618 2182

## CCTV பொருத்துதல்
## A/C பொருத்துதல்
## Solar பொருத்துதல்

யாழ்ப்பாணம், கொழும்பு, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்துதல், ஏற்கனவே பொருத்தப்பட்டவை தொடர்பான திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்

V-CON IT PARK
077 3767 899 021 221 1818

## தேவை

பிறின்டேர்ஸ் ஒன்றுக்கு Awards, Medals, Tie Print, Batch என்பன குறைந்த விலையில் செய்து தருவதற்கு முகவர் ஒருவர் தேவை.

T.P: 070 356 7811

## இத்தாலி மொழி

இத்தாலி செல்வோருக்கான இத்தாலி மொழி, எழுத, பேச, வாசிக்க மிக குறுகிய காலத்தில் கற்றுக்கொடுக்கப்படும்.

CONTACT: 076 161 9826 (A.SITHRA)

## வன்னி விழிப்புலனற்றோர் சங்கத்தின் பார்வையற்ற பயனாளிகளின் பிள்ளைகளுக்காக முன்னெடுக்கப்படும் LBR கல்வி அபிவிருத்தித்திட்ட உத்தியோகத்தருக்கான பணி வெற்றிடம்

தகைமைகள் :
- உயர்தர தேர்வில் வர்த்தக பிரிவில் தேர்ச்சி
- மும்மொழித்திறன்
- தொண்டு நிறுவனங்களில் பணி அனுபவம் விரும்பத்தக்கது.
- சம்பளம் நேரில்
- சுயவிவரக்கோவை அனுப்ப வேண்டிய முகவரி
- மின்னஞ்சல் - vannivissually@gmail.com
- முகவரி - வன்னி விழிப்புலனற்றோர் சங்கம், இல-203, A9 வீதி, கிளிநொச்சி.

தொடர்புகளுக்கு : 077 363 8533
விண்ணப்ப முடிவு - 05.05.2019
குறிப்பு - பணி இடம் கிளிநொச்சி

(AKN 700)(04.17)

## வாடகைக்கு விடப்படும்

அனைத்து வசதிகளும் உள்ள Hiace வாகனம் மற்றும் கென்ரர் வாகனம் என்பன நாளாந்த / மாதாந்த வாடகைக்கு குறைந்த் விலையில் விடப்படும்.

(AKN 700)(04.17)

077 026 1966

## Vacancy

யாழ் பல்கலைக்கழகம் அருகில் அமைந்துள்ள Phone Shop ஒன்றிற்கு அலுவலக பணியாளர் தேவை. வயது எல்லை 18 - 25 ஆண் அருகாண்மயில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(CS 24920)(04.17)

077 143 5595

SAMSUNG

# Ready, Action!



Galaxy A50 | A30 | A20 | A10

The coolest new action phones

Infinity-U Display* 123° Ultra Wide Video* 4000 mAh Battery* Fast Charging*

*Features mentioned here are available on Galaxy A50 and A30 models only. Creative visualization. Images shown here are for representational purposes only, actual may vary.

பெற்றுகொள்ளக் கூடிய இடங்கள் : DAMRO | JKOA | SINGHAGIRI | SINGER | softlogic | Dialog | Sri Lanka Telecom Mobitel | daraz | WOW.lk

ரூ. 20,720 இலிருந்து.

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

SamsungLankaOfficial
SamsungLankaOfficial

"Youth Brand of the year 2018 & 2019"

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.04.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.